ழார் வழிவந்த செம்மல்! சேவையே வடிவான அண்ணல்!



27 FEB 1967

— Eswari —

# நன்றி மறவோம்

ஆசிரியர்கள்:

ள அண்ணாமலை, கருப்பையா பி.ஏ




## can you?

Call it a fetish for perfection. Call it a chronic preoccupation. We can't tolerate the least flaw in what we make. We don't pass everything that comes out of our factories.

It pays—in your goodwill and satisfaction...in a well earned reputation for the excellence of all TI products.

**TUBE INVESTMENTS OF INDIA LTD, Madras 1**

Proprietors of: TI Cycles of India - Tube Products of India - The Wright Saddles of India - TI Metal Sections

Subsidiaries: TI Diamond Chain Limited - TI Miller Limited

Backed by TI Research and Technology

**What are these TI products?**

The world-famous Hercules, Phillips and BSA cycles which have set standards of unequalled quality in over 135 countries...

TRU-WEL ERW steel tubes, Brampton cycle fittings, Olympic, Brooks and Hector saddles, TI cycle chains and Miller dynamo lighting sets for the cycle industry and trade...

TRU-WEL ERW steel tubing, cold rolled steel strip, Diamond roller chains for heavy and light engineering industries, and cold roll formed metal sections.

But what matters most to us in our service to you is—a TI product just can't go wrong. It is shaped in the TI tradition of tested performance.

I-347

*With Compliments from*

# ARUNA SUGARS LTD.

*Regd. Office*: 'DHUN BUILDING'

175/1, MOUNT ROAD, MADRAS-2.

Factory : PENNADAM
S. Arcot Dt.

Phone : 83615
Grams : 'ANUSHAM'

168612

V211,21y7M97
N67

# நன்றி மறவோம்

ஆட்சி உரிமையினை இழந்து, வறுமை அரக்கனின் கோரப் பிடியிலே பாரத நாடு சிக்கிக் கிடந்தது.

காங்கிரஸ் மகாசபை தோன்றியது; இந்த இழிநிலையைப் போக்கிடக் கங்கணம் கட்டிக் கொண்டது.

தாதாபாய் நௌரோஜி, பால கங்காதர திலகர், மோதிலால் நேரு, சித்தரஞ்சன்தாஸ், எஸ். சீனிவாச அய்யங்கார், ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், மௌலானா அபுல்கலாம் ஆஸாத், சுபாஷ் சந்திர போஸ், வ. உ. சிதம்பரனார், ராஜேந்திர பிரசாத் போன்ற எண்ணற்ற தளபதிகள் விடுதலை வேள்வியிலே தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர்.

தளபதிகளுக்கெல்லாம் தலைவராக-இந்தியாவின் இதயமாக-காந்தியடிகள் என்னும் பேரொளி திகழ்ந்தது.

அந்நியர் ஆட்சி அகன்றது. பாரதம் உரிமை பெற்ற நாடாயிற்று. இந்திய மக்கள் சுதந்தரத் தென்றலை அனுபவிக்கலானார்கள். பெருங் கவிஞர் பாரதியாரின் கனவு பலித்தது.

ஜவாஹரின் தலைமையில் புதிய பாரதம் உருவாகத் தொடங்கியது.

காமராஜின் தலைமையில் புதிய தமிழகம் எழலாயிற்று.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கருதித் தொண்டாற்றிய ஜவாஹர் இன்று மனித வடிவில் நம்மிடையே இல்லை.

இன்றைய புதிய பாரதத்தின்—வறுமையை எதிர்த்துப் போரிடும் இளைய பாரதத்தின்—தலைவர் காமராஜ் அவர்கள்.

இந்தப் போரிலும் பற்பல தளபதிகள். தமிழகத்தில் பக்தவத்சலம்.

காங்கிரஸ் மகாசபை,
காந்தியடிகள்,
ஜவாஹர்,
காமராஜ்

—இது ஒரு நீண்ட சங்கிலியாகத் திகழ்வதாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் புனிதச் சங்கிலி, தேரின் வடம் தேரினை அழைத்துச் செல்வதுபோல, பாரத மக்கள் அனைவரையும் சுபிட்சப் பாதையை நோக்கி-ஜனநாயக சோஷலிச இலட்சியத்தை நோக்கி-அழைத்துச் செல்கிறது.

இந்த நீண்ட சங்கிலியில் பக்தவத்சலம் ஒரு மாமணியாக விளங்குகிறார்.

பக்தவத்சலம் அவர்கள் புதிய தமிழகத்தை உருவாக்குவதில் செய்து வரும் பணிகளைத் தொகுத்துரைப்பது 'நன்றி மறவோம்' என்ற இந்த நூல்.

காங்கிரஸ் மகாசபையின் ஆட்சியும், காமராஜ் அவர்களின் தலைமையும், பக்தவத்சலம் அவர்களின் பணிகளும் தொடரவேண்டும் என்று நாட்டு மக்கள் அனைவரும் விரும்புகிறோம்.

பக்தவத்சலம் அவர்களின் தொண்டுகள் பற்றிய இந்த நூலினை, பாரத அன்னையின் திருப்பாதங்களில், மரியாதையோடும், மகிழ்ச்சியோடும் சமர்ப்பிப்பதில் பேரானந்தம் அடைகின்றோம்.

சென்னை—17
20—1—67

**சின்ன அண்ணமலை**
**கருப்பையா**



சென்னை மாநில முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் எங்கள் தொழிற்சாலையைத் துவக்கி வைத்தபோது எடுத்த புகைப்படம்

அன்னார் நீடூழி வாழ்கவென உளமார
வாழ்த்துகிறோம்.

## W. S. இன்ஸுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்.,

***175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.***

# காணிக்கை

## கவிஞர் கண்ணதாசன்

புருவின் அமைதி புலியின் சீற்றம்
மானின் மானம் மலையின் நேர்நிலை
வானின் விரிவு வனத்தின் நெருக்கம்
மலரின் தூய்மை மறையின் உட்பொருள்
வேந்தர் கோன்முறை வீரர் துணிவு
கடலின் ஆழம் கவிஞரின் ரசனை
செய்முறைச் சிறப்பு சேர்ந்தார் அணைத்தல்
அவையமைந்தொழுகல் ஆன்றூர் மதித்தல்
இவையே வடிவாய் எழுந்த மூதறிஞர்
பண்டைப் பெருமைப் பல்லவர் குலத்து(த்)
தொண்டைமண்டலத் துளுவ வேளாளர்
தக்க நேரத்தே தந்துணை காட்டி(ச்)
சிக்கல் தீர்க்கும் சேக்கிழார் தோன்றல்
கன்னித்தமிழர் காமராசர் தம்
உள்ளச் சிறையில் உலவும் நாயகர்
“பிரித்தலும் பேணிக் கொளலும் பிரித்தார்(ப்)
பொறுத்தலும் வல்ல” புகழ்சேர் அமைச்சர்
பழக்க வழக்கப் பண்புகள் கூடி(ப்)
படிந்த கோவில்! பக்தவத்சலனர்!

With best Compliments from

# A. K. GOPALAN

CIVIL ENGINEER & CONTRACTOR

54, SRINIVASA NAGAR, MADRAS-31.

**Phone : 65837**

TO KNOW THE WONDER OF INDO - SOVIET FRIENDSHIP

READ

# "Soviet Land"

Published in 12 Indian Languages, English and Nepali

**Special Reduction in Subscription Rates**

| | | | |
|---|---|---|---|
| Yearly | ... | Rs. 6 00 | English |
| Three yearly | ... | Rs. 12 00 | English |

**Telugu, Tamil, Malayalam, Kannada and other languages**

| | | |
|---|---|---|
| Yearly | ... | Rs. 5 00 |
| Three Yearly | ... | Rs. 10 00 |

FREE

All subscribers will get free a beautiful multi-coloured calendar for 1967, and three-year subscribers will be presented in addition a pocket SOVIET LAND Diary 1967.

For Subscription, please contact our authorised agents or send your orders directly to:

Soviet Land Office

44, THEAGARAYA ROAD, MADRAS-17.

*Greetings*

TO OUR CHIEF MINISTER,

Hon'ble Sri. M. BHAKTAVATSALAM

# Gannon, Dunkerley & Co (Madras) Ltd.,

CIVIL ENGINEERS & CONTRACTORS,

**GDC Building,**

19, CATHEDRAL ROAD, MADRAS-6

Telegram : VITOPUS

Telephone : 83561 (4 lines)



தமிழகத்தைப் பொறுத்தவரை நிர்வாகத் துறையில் பக்கவத்சலம் அவர்கள் தனது ஆற்றலை விளக்கிப் பெரும் புகழ் படைத்திருக்கிறார். தமிழகத்தில் நிறைவேறியுள்ள பல முற்போக்கான முன்னேற்றங்களில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

—காமராஜ்.

# தன்னலமற்ற தொண்டர்

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
(இந்தியக் குடியரசுத் தலைவர்)

கடந்த சில ஆண்டுகளாக திரு. பக்தவத்சலம் அவர்களை நான் சந்தித்து வருகிறேன். அவரது பணியைப் பொறுத்த வரை தன்னலமின்றி, சேவா உணர்ச்சியுடன் செயலாற்றி வருகிறார். அத்துடன் அறநிலைய மந்திரி என்ற ரீதியில் பக்தவத்சலம், வழிபாட்டின் மூலம் தர்மத்தைப் பின்பற்ற இளைஞர்களுக்கும், முதியோர்களுக்கும் நினைவுறுத்துவதற்கு முயற்சித்து வருகிறார். இவ்விரு பணிகளுக்காக மட்டுமே அவரை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சென்னை ராஜ்யத்தின் நிர்வாகத்துடன் சுமார் இருபது ஆண்டுகளாக அவர் சம்பந்தப் பட்டிருக்கிறார்; தென்னக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபட்டும் வருகிறார். அறநிலையங்கள், கோயில்கள் விஷயத்தில் அவர் காட்டிவரும் அக்கறை காரணமாக கடந்த சில வருடங்களாக அவரை நான் அதிக அளவு அறிந்திருக்கிறேன். தென்னகக் கோயில் களின் திருப்பணிக்காகவும் அவற்றைப் புனிதமான ஆன்மீகக் கலாசாரக் கேந்திரங்களாக விளங்கச் செய்யவும் அவர் பாடுபட்டு வருகிறார்.

ஆண்டவனிடம் நமக்கு நம்பிக்கை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தர்மத்தைச் செய்து வருவோமானால் நாம் சமயப் பற்று உடையவர்களாகி விடுகிறோம். இந்தத் துறையில் நமது வாழ்க்கையில் சிறிதளவு செய்தாலும் அது நம்மை அச்சத்திலிருந்து காப்பாற்றும். தர்மத்தையும், நேர்மையான வழியையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள் கிறோம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது பக்தவத் சலம் அவர்களின் பணி தன்னலமற்றது—சேவா உணர்ச்சியு டன் கூடியது-என்பதை அறிகிறோம்.

பக்தவத்சலம் வாழ்க்கை வரலாறு என்ற இந்த நூலை எழுதிய ஆசிரியர் திரு. கருப்பையா அவர்களையும் இந்த நூலை வெளியிட்டுள்ளவர்களையும் நான் மனமாரப் பாராட்டு கிறேன்.

*('பக்தவத்சலம் வாழ்க்கை வரலாறு' நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரையிலிருந்து)*

# பாராட்டுக்கள்

திரு. பக்தவத்சலம் அவர்கள் தேச விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகள் தலைமையில் நடந்த மகத்தான இயக்கத்தில் பங்கு கொண்டு உழைத்தவர். தமிழகத்தைப் பொறுத்தவரை நிர்வாகத்துறையில் தனது ஆற்றலை விளக்கிப் பெரும் புகழ் படைத்திருக்கிறார். தமிழகத்தில் நிறைவேறியுள்ள பல முற்போக்கான முன்னேற்றங்களில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

**காமராஜ்**

திரு. பக்தவத்சலம் அவர்கள் பழம்பெரும் சுதந்தரப் போராட்ட வீரர்களுள் ஒருவர். சென்னை ராஜ்யத்திற்கு அவர் சிறப்பான சேவை செய்திருக்கிறார். அவருடைய வாழ்நாள் முழுவதும் ஆரவாரம் இல்லாத அமைதியான தொண்டராக இருந்து வந்திருக்கிறார்.

**லால்பகதூர் சாஸ்திரி**

மிகச் சிறந்த சேவையினாலும், மக்கள் அவரிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகவும் திரு. பக்தவத்சலம் அவர்கள், பொது வாழ்வில் அவர் இன்று வகிக்கும் இடத்தைப் பெற்றுள்ளார்.

**இந்திரா காந்தி**

மக்கள் தொண்டையும், தெய்வத்தொண்டையும் ஒன்றாகவே கருதி ஈடுபட்ட சேக்கிழாரை ஒவ்வொரு கணமும் நினைவூட்டுகிறார் ஸ்ரீ. பக்தவத்சலம் அவர்கள்.

**சங்கராச்சாரியார்**

எளிமை, பற்றற்ற தன்மை ஆகியவை திரு. பக்தவத்சலம் அவர்களுடைய மிகச் சிறந்த குணங்கள் ஆகும்.

**எஸ். கே. பாடீல்**

சமயத்துறை வளர்ச்சிக்காக திரு. பக்தவத்சலம் அவர்கள் காட்டிவரும் ஆர்வம் காரணமாக தமிழ்நாடு அவரை என்றும் நினைவில் கொண்டிருக்கும்.

**டி. டி. கிருஷ்ணமாச்சாரி**

பல்லாண்டுகளாக திரு. பக்தவத்சலம் அவர்கள் சென்னை அரசாங்கத்திற்கு ஒரு உறு தூணாக விளங்குகிறார்.

**வி. வி. கிரி**

திரு. பக்தவத்சலம் அவர்கள் மிகக் கடுமையான உழைப்பாளி; வருந்தி உழைக்கின்ற பண்பாளர். எந்தத் தகவல்களும் அவரிடத்தில் எப்போது வேண்டுமானாலும் தயாராகக் கிடைக்கும்.

**ஸ்ரீபிரகாசா**

முதுபெரும் சுதந்தரப் போராட்ட வீரரான திரு. பக்தவத்சலம் அவர்கள் சென்னை நிர்வாகத்தை நடத்துவது நம் அதிர்ஷ்டம்.

**சி. சுப்பிரமணியம்**

சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினரிடத்தும் திரு. பக்தவத்சலம் அவர்கள் நியாயமாக நடப்பவர். மக்களிடையே நிலவும் இணக்கமான நல்லுறவுகளை வகுப்புவாதம் குலைத்து விடுவதற்கு அவர் அனுமதித்தது இல்லை.

**எம். அனந்தசயனம் அய்யங்கார்**

திரு. பக்தவத்சலம் அவர்களின் அடக்கமும், அன்புடைமையும் சென்னை ராஜ்யத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதுமே பிரசித்தமாக விளங்குகின்றன.

**வெங்கடசுப்பா ரெட்டியார்**

நமது முதலமைச்சர் அவர்கள் பழம்பெரும் தேசபக்தர். சுதந்தரப் போராட்டக் காலத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல்லாண்டுகள் தமிழ்நாட்டு அமைச்சரவையில் இருந்து திறம்படப் பணியாற்றி வருகிறார். மிகுந்த அறிவும், ஆற்றலும், தெய்வ பக்தியும் நிறைந்தவர்.

**எஸ். செல்லபாண்டியன்**

எடுத்த இலாகா எதுவாக இருந்தாலும் அதை நேர்மையுடன் ஆராய்ந்து பார்த்து, பிறர்மனம் புண்படாமல் திறமையாகச் செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் இருக்கிறது. அது ஒன்றே அவரது சேவையை நீடிக்கச் செய்கிறது. அவர் எப்படி எளிய வாழ்க்கை நடத்துகிறாரோ அதேபோல் அவருடைய அரசாங்கத்தில் வீண் செலவுகளுக்கு இடமில்லை. இந்த விஷயத்தில் காமராஜருக்கோ, ராஜாஜிக்கோ அவர் எந்த விதத்திலும் குறைந்தவர் இல்லை.

**எஸ். எஸ். வாசன்**

தமிழகத்தில் தமிழ் மொழியை நிர்வாகத்துறையில் கொண்டு வருவதற்கு எல்லா நடவடிக்கைகள் செய்து வருவதற்கு திரு. பக்தவத்சலம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

**எல். கிருஷ்ணசாமி பாரதி**

வருங்கால வரலாறு, திரு. பக்தவத்சலம் அவர்களை இருபதாம் நூற்றாண்டின் சேக்கிழார் என்று நிச்சயமாக உறுதியுடன் ஏற்றுக்கொள்ளும்.

**எஸ். என். ஏ. அஜீஸ்**

# சிறந்த தியாக வரலாறு படைத்தவர்

**சி. ஆர். பட்டாபிராமன்**
*(மத்திய ராஜாங்க அமைச்சர், சட்டத்துறை)*

திரு. பக்தவத்சலம் அவர்களையும் அவருடைய குடும்பத்தினரையும் நான் பல ஆண்டுகளாக அறிவேன். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென் சென்னையில் மிகவும் மதிப்பிற்குரிய ஒரு வழக்கறிஞராக அவருடைய மாமனார் விளங்கினார். நமது முதலமைச்சர் வழக்கறிஞராகத் தொடர்ந்து தொழில் நடத்தி இருந்தால் அதில் உச்ச நிலையைச் சுலபமாக அடைந்திருக்க முடியும். அவரும் அவருடைய குடும்பத்தினரும் இளமையிலேயே தேசப் போராட்டத்தில் குதித்து விட்டார்கள். அவர்களுடைய தியாக வரலாறு மிகவும் சிறப்புடையது.

1942 இயக்கத்தின்போது பக்தவத்சலம் கைது செய்யப்பட்டார். அப்போது அவருக்காக ஆஜரான வழக்கறிஞர்களுள் நானும் ஒருவன். சிறையிலிருந்தபோது தமக்கு எந்த விதமான சௌகரியங்களும் வேண்டாம் என்று கூறிய தீரர்களில் பக்தவத்சலம் ஒருவர்.

நிர்வாகி என்ற வகையில் பக்தவத்சலம் அடைந்துள்ள வெற்றிகளைக் கூறுவது என்றால், அது ஒரு நீண்ட கட்டுரையாகத்தான் அமையும். இந்தியாவில் அரசியல் மேதை என்ற முறையில் அவருடைய சாதனை ஈடு இணையற்றது. சென்னை அரசாங்கம் அதனுடைய சாதனைகளுக்காகப் புகழப்படுகிறது என்றால், மிகச் சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்ற மாநிலம் என்று கூறப்படுகிறது என்றால், பக்தவத்சலமே அதற்குப் பெரும் அளவில் காரணம்.

முதலமைச்சராகவும், கல்வி வல்லுனராகவும் இருப்பதோடு கூட, நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதிலும் நமது கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதிலும், குறிப்பிடத்தக்க அளவில் பக்தவத்சலம் பணியாற்றி இருக்கிறார். இன்று தமிழகத்திலுள்ள கோயில்கள் இறை வழிபாட்டுக்குரிய ஸ்தலங்கள் மட்டும் அல்ல; சுற்றுப் பயணம் செய்வோரை ஈர்க்கும் இடங்களாகவும் அவை விளங்குகின்றன. இந்தியாவிலேயே மிகவும் திறமையாக அவை நிர்வகிக்கப் படுகின்றன; பாதுகாக்கப்படுகின்றன.

பக்தவத்சலம் தலைமையின் கீழ் பல கோயில்களில் திருப்பணித் தொண்டு மேற்கொள்ளப்பட்டு, திறம்பட முடிக்கப் பட்டுள்ளது. இந்த ஒரு பணிக்காக மட்டுமே, பக்தவத்சலமும் அவருடைய குடும்பத்தினரும் தமிழகத்தின் நிரந்தர நன்றிக்கு உரியவர்கள் ஆவர்.

முதலமைச்சர்களில் அவர் மிகவும் மதிப்பிற்குரிய ஒருவராகத் திகழ்கிறார். தேசிய அபிவிருத்திக் கவுன்சில் போன்ற அகில இந்திய ஸ்தாபனங்கள் டில்லியில் கூடுகின்ற போது, அவருடைய சொற்பொழிவுகள் மிகவும் கவனத்துடன் கேட்கப்படுகின்றன. அவர் சொல்லுகின்ற விஷயங்கள் தகுதி வாய்ந்தவை என்பது மட்டுமின்றி, அவருடைய தெளிவான பார்வையும் இதற்குக் காரணம் ஆகும்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் மகிழ்ச்சியுடனும், நலமுடனும் பல்லாண்டு வாழ்வாராக!

# பண்பாளர் பக்தவத்சலம்

காலை மணி ஒன்பது.

தென் சென்னை, பீமண்ணன் பேட்டையில், வாரன் ரோட்டில் ஒரு விசாலமான வீடு! வாசலில் ஏழு, எட்டுக் கார்கள் நிற்கின்றன. இரண்டு வாசல்கள். ஒன்றின் வழியாக உள்ளே நுழைகிறோம். முன்பக்க வராந்தா ட வடிவில் உள்ளது; அதில் நாற்காலிகளில் பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். அதையும் கடந்து உள்ளே முன் ஹாலில் நுழைகிறோம். சதுர வடிவில் வரிசையாக சோபாக்கள்; அங்கும் பலர் வீற்றிருக்கிறார்கள்.

இடது பக்கம் முன்வாசலை யொட்டினாற்போல ஒரு சிறிய அறை. தள்ளு கதவுகளுக்குப் பின்னால் எட்டிப் பார்த்தால் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களது உருவம் தெரிகிறது. அரையில் தட்டுச் சுற்று வேட்டி, மேலே கை வைத்த பனியன், இடது தோளில் ஒரு துண்டு—காலை நேரங்களில் இவையே அவரது ஆடைகள்.

மந்திரிகள், உயர்தர அதிகாரிகள், தொழிலதிபர்கள், வெளிநாட்டு நிபுணர்கள், இயக்கப் பிரமுகர்கள், கலைஞர்கள், கட்சிச்சார்பற்ற அறிஞர்கள், பத்திரிகைக்காரர்கள், மாற்றுக் கட்சித் தலைவர்கள்—அவரைத் தினசரி சந்திக்க வருவோரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

அவர் எல்லோருடனும் பேசுகிறார்; பேசுகிறபோதே எழுதுகிறார்; அல்லது 'பைல்' கட்டுகளைப் பார்வை யிடுகிறார்; இடையிடையே தொலைபேசி அழைப்புகளையும் கவனிக்கிறார்.

"மாலை என்ன நிகழ்ச்சிகள்?"—முதலமைச்சரவர்களின் பாதுகாப்பு அதிகாரி ராதாகிருஷ்ணனைக் கேட்கிறோம்.

"நான்கு மணிவரை கோட்டையில் இருப்பார். ஐந்து மணிக்கு ஆவடியில் ஒரு பள்ளிக்கூடத் திறப்பு. ஆறு மணிக்கு பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியனில் ஒரு நிகழ்ச்சி. ஏழு மணிக்கு வட சென்னையில் ஒரு பொதுக்கூட்டம். எட்டு மணிக்கு கிண்டி இராஜபவனத்தில் ஒரு விருந்து. இதற்கு இடையில் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் வீட்டில் கல்யாணம். அதற்கும் போவதாக இருக்கிறார்."

"இராஜபவன் விருந்துக்குப் பிறகு நேராக வீட்டுக்கு வந்து விடுவாரா?"

"இல்லை. ஒன்பது மணிக்குத் திருவட்டீஸ்வரன் பேட்டையில் கிருபானந்த வாரியாரின் காலட்சேபம். அங்கு சென்று சில நிமிடங்கள் பேசுகிறார்; இரவு பத்து மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்து விடுகிறார்—'ஆனந்த விகடன்' நிருபரை வரச் சொல்லி யிருக்கிறார். அதற்குப் பிறகு அலுவலக பைல்கள்"......ஒரு இலேசான புன்னகையுடன் நமது வியப்பைத் தெரிவிக்கிறோம்.

'விவேகானந்தரின் நூல்கள், தேசியத் தலைவர்களின் சொற்பொழிவுகள், சுயாட்சி சுதேசிக் கிளர்ச்சிகள், தீவிர தேசிய இயக்கம், குடும்பத்துப் பெரியவர்களின் பொது வாழ்வுப்பணிகள் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து என்னுடைய வாழ்க்கையை நிர்ணயித்து விட்டன" என்று கூறும் பக்தவத்சலம் அவர்களுக்கு வயது எழுபது.

ஏறத்தாழ நாற்பத்தாறு ஆண்டுக் கால அரசியல் அனுபவமும், இருபது வருட நிர்வாக அனுபவமும் உடைய பக்தவத்சலம், காந்திய சகாப்தத்தில் நடைபெற்ற எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். தடியடிகளையும், சிறைவாசங்களையும் புன்னகையுடன் ஏற்றவர். இன்றைய தமிழகத்தின் மூத்த தேசியத் தலைவர்களிலே ஒருவராக மிளிர்பவர்.

ஐந்து வயதிலேயே தந்தை கனகசபாபதி முதலியாரை இழந்துவிட்ட சிறுவன் பக்தவத்சலம் அவனது தாயார் மல்லிகா அம்மாளுடன் நசரத் பேட்டையில் தாய் மாமன் வீட்டில் வளர்ந்தான். மாமன்மார் இருவரும் தேசியவாதிகள். மூத்தவர், எவளப்ப முதலியார் செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் முதல் தலைவர். இளையவர், தமிழகத்தின் கடந்த தலைமுறையைச் சேர்ந்த முன்னணித் தலைவர்களிலே ஒருவரான சி. என். முத்துரங்க முதலியார்.

பக்தவத்சலத்தின் மீது நிரம்பப் பாசம் கொண்டிருந்த முத்துரங்க முதலியார் மறுபடியும் அவனைச் சென்னைக்கழைத்து வந்து மயிலாப்பூரில் குடிவைத்தார். (முகவரி 13, சந்நிதித் தெரு) மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்த பக்தவத்சலம் 1915-ல் எஸ். எஸ். எல். சி., பரீட்சையில் தேறினான்.

பக்தவத்சலம் இண்டர்மீடியட் வகுப்பில் படித்தபோது மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவனுக்கு டியூடராக இருந்தார். கல்லூரியில் படிக்கும்போதே அவன் நிறையக் கட்டுரைகள் எழுதுவதுண்டு.

1920-ல் பக்தவத்சலம் பி. ஏ. பரீட்சையில் தேறினார். அதே ஆண்டில் சிர. எம். பக்தவத்சலம் சௌ. ஞானசுந்தரம் அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக்கொண்டார். (மணமகனுக்கு வயது 23; மணமகளுக்கு வயது 17)

திருமணத்திற்குப் பிறகு பக்தவத்சலம் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். சட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு காலஞ் சென்ற அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரவர்களிடம் ஜூனியராக வழக்கறிஞர் தொழில் புரிய ஆரம்பித்தாலும் பக்தவத்சலத்தின் மனம் அதில் ஈடுபடவில்லை. தேசத்தின் அழைப்புக்குரல் அவரது காதுகளில் விழுந்து விட்டதே!

என்றுமே பக்தவத்சலம் தமது குடும்பத்தைப்பற்றிக்கவலைப்பட்டதில்லை; கவனித்ததுமில்லை. அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட குடும்பத்தில் யாரும் தடையாக இருந்ததில்லை. ஏனென்றால் அவர் பிறந்த இல்லமும், பெண் எடுத்த வீடும் 'தேச விடுதலை காண வேண்டும்' என்ற இலட்சியத்தைக் கொண்டவை ஆயிற்றே!

பக்தவத்சலத்தின் அரசியல் தொடர்புகள் அவருடைய கல்லூரி நாட்களிலேயே முளைவிடத் தொடங்கின. கல்லூரியில் படிக்கும்போது சென்னையில் நடைபெற்ற ஹோம்ரூல் இயக்கக் கூட்டங்களுக்கும், அடையாறு தியாசாபிகல் சொஸைடி விவாதங்களுக்கும் அவர் போவார்.

1919–ல் வெளியான ரௌலட் மசோதாக்களை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சி நடைபெற்றது. காந்தியடிகள் தமது பிரசித்தி பெற்ற சத்தியாக்கிரகப் போராட்ட முறைகளை இந்தியாவில் அப்போது தான் தொடங்கினார். காந்திய சகாப்தம் ஆரம்பமாகி விட்டது.

சென்னையிலும் ரௌலட் சட்டங்களைப் பலமாக எதிர்த்தார்கள். மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலிலிருந்து மாபெரும் கண்டன ஊர்வல மொன்றை பக்தவத்சலமும் பிறரும் நடத்தினார்கள். ஊர்வலம் கடற்கரைக்குச் சென்றது. இப்போது திலகர் கட்டம் என்று அழைக்கப்படும் இடத்தில், ஒரே சமயத்தில், ஆறு மேடைகளில், ஆறு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன!

1923-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் காகிநாடாவில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. பக்தவத்சலம் முதன் முதலாகச் சென்று கலந்துகொண்ட அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு அதுதான். அதற்குப் பிறகு காந்தியடிகள் கதர்ப்பிரசாரம் செய்வதற்காக தமிழ் நாட்டிற்கு வந்தபோது செங்கற்பட்டு ஜில்லா சுற்றுப்பயணத்தில் பக்தவத்சலம் அவருடன் சென்றார்; காந்திய நிர்மாணத் திட்டப்பணிகளிலும் பங்கு கொண்டார்.

1927–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் சென்னையில் காங்கிரஸ் மகா சபையின் வருடாந்திர மகாநாடு நடைபெற்றது. காங்கிரசின் வரலாற்றில் அது ஒரு முக்கியமான மகாநாடு. டாக்டர் எம். ஏ. அன்சாரி அவர்கள் தலைமையில் நடந்த அந்த மாநாட்டில்தான் நேருஜி பூரண சுதந்தரத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசினார். அன்னிபெசண்ட் அம்மையார் உட்பட அனைவரின் ஆதரவோடு அது நிறைவேறியது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த மகாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவர் சி. என். முத்துரங்க முதலியார்; காரிய தரிசி பக்தவத்சலம்.

வெகுஜன சட்டமறுப்பு இயக்கத்தின் போதுதான் பக்தவத்சலம் முதன் முதலாகச் சிறைசென்றார். சிறையிலிருந்தபோதே செங்கற்பட்டு ஜில்லா போர்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளி வந்ததும் பக்தவத்சலம் மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபட்டார் (மதுவிலக்குக் குழுவிற்குக் கன்வீனர் பக்தவத்சலம்; தலைவர்: ராஜாஜி) தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார். (தலைவர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.)

*1934 - 35* – ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போட்டியிடுவதென்று தீர்மானித்தது. அதற்காக ஏற்படுத்தப்பட்ட 'தமிழ்நாடு சிவிக் போர்டு' என்ற அமைப்பின் கூட்டுக் காரியதரிசி பக்தவத்சலம்.

*1935*–ல் சத்தியமூர்த்தி, சென்னை மாகாணக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது பக்தவத்சலம் உபதலைவர். *1936*-ல் சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது காமராஜ், பக்தவத்சலம் ஆகியோர் காரியதரிசிகள்.

பக்தவத்சலம் சிறிது காலம் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார். 1937–ல் பக்தவத்சலம் சென்னை மாநகராட்சியின் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

சென்னை மாகாணத்தில் ராஜாஜி தலைமையில் காங்கிரசாட்சி ஏற்பட்டதும் பக்தவத்சலம் ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்குப் பார்லிமெண்டரி காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். பக்தவத்சலம் தமக்கு அப்பதவி வேண்டாம் என்று முதலில் மறுத்தார். ராஜாஜி விடவில்லை. "நீங்கள் இருக்கத்தான் வேண்டும்" என்று வற்புறுத்தி அழைத்துக்கொண்டார்.

இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கியதும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவுப்படி நாடெங்கிலும் இருந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினாமா செய்தன. மகிழ்ச்சியுடன் பதவியை உதறிய பக்தவத்சலம் காங்கிரஸ் மகாசபை தொடங்கிய தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கி, திருவள்ளூரில் கைதானார். ஒன்பது மாதச் சிறையும், இருநூற்றைம்பது ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு திருச்சி சிறையில் வைக்கப்பட்டார். அங்கே சிறையிலிருந்தபோது ராஜாஜியுடன் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும்,வால்மீகி ராமாயணமும் படித்தார்!

சிறையிலிருந்து வெளிவந்ததும் பக்தவத்சலம் ஊர்காப்புச் சங்கம் அமைத்துத் தொண்டாற்றினார். ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகி பாகிஸ்தான் பிரிக்கப்பட வேண்டுமென்று பிரசாரம்செய்யத்தொடங்கினார்! அவருக்கு எதிராக காமராஜ், பக்தவத்சலம், சி. சுப்பிரமணியம் முதலானவர்கள் காங்கிரசின் நிலையை விளக்கிப் பிரசாரம் செய்தார்கள். யுத்த நிதிக்காகக் கட்டாய வசூல் செய்யப்பட்டதைக் கண்டித்தும் பிரசாரம் செய்தார்கள்.

பிரசித்தி பெற்ற ஆகஸ்ட் இயக்கத்தைத் தீர்மானித்த பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் பக்தவத்சலம் கலந்துகொண்டார். அங்கிருந்து திரும்பியதும் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

வடக்கே அமராவதி என்னும் ஊரில், மாட்டுக் கொட்டகை போன்றதொரு இடத்தில், இரண்டரை ஆண்டுகள் பக்தவத்சலம் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டார்.

"உங்களைப் பாதுகாப்புக் கைதியாக வைத்திருப்பதற்கு ஆட்சேபம் ஏதும் உண்டா?" என்று கேட்டது அரசாங்கம். பக்தவத்சலம் பதிலே எழுதவில்லை; அவரது உறுதியை மெச்சாதவர்கள் இல்லை.

பாதுகாப்புக் கைதியாக இருந்தபோதுதான் சிறிது சமையல் செய்ய பக்தவத்சலம் கற்றுக்கொண்டார். அத்துடன் எம். அனந்தசயனம் அய்யங்காரிடம் வால்மீகி இராமாயணம் படித்தார்.

1944–ல் பக்தவத்சலம் விடுதலை செய்யப்பட்டார். 1946–ல் அமைந்த பிரகாசம் மந்திரி சபையிலும், அதற்குப் பிறகு தொடர்ச்சியாக ஓ. பி. ராமசாமி ரெட்டியார், பி. எஸ். குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராஜ் ஆகிய அனைவரது

அமைச்சரவைகளிலும் இடம் பெற்றுத் தொண்டாற்றினர்.

காமராஜ் திட்டப்படி, 1963-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 2-ந் தேதி யன்று காமராஜ் முதலமைச்சர் பதவியி லிருந்து விலகிக்கொண்டார். அதேதினம் பக்தவத்சலம் அவர்களை முதலமைச்ச ராகக் கொண்ட மந்திரிசபை பதவி யேற்றது.

பக்தவத்சலம் வெறும் அரசியல் தலை வர் மட்டுமல்லர். பல்வேறு துறைகளில் அவர் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகிறார்.

காந்தியடிகள் விட்டுச் சென்ற பணிகளைச் செய்வதற்காக தொடங்கப் பட்டுள்ள காந்தி ஸ்மாரக் நிதியின் தமிழ் நாடு கிளைக்குத் தலைவராக பக்தவத்சலம் பணியாற்றி வருகிறார். சிறந்த எழுத்தாள ரான அவர் பல நூல்களையும் எழுதியிருக் கிறார். இந்தியா, பாரததேவி ஆகிய பத்திரிகைகளைச் சிறிது காலம் நடத்தி யிருக்கிறார்.

சென்னையில், கலாசார சுதந்தரத்திற் கான இந்தியக் கமிட்டி கூடியபோது பக்தவத்சலம் அதன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து செயலாற்றினர்.

1949-ல் பர்மாவில் இந்தியர் நிலங்கள் தேசிய உடைமையாக்கப்பட்டபோது அது குறித்து பர்மிய அரசினரோடு விவாதிக்க பக்தவத்சலம் பர்மா சென்றார். அது அவ ரது முதல் வெளிநாட்டுப் பயணம். 1956ல் ஜெனிவாவில் நடைபெற்ற அகில உலகத் தொழிலாளர் மகாநாட்டில் இந்திய அர சாங்கப் பிரதிநிதிகளின் தலைவராக பக்த வத்சலம் சென்று கலந்து கொண்டார். 1960-ல் சோவியத் அரசினர் அழைப்பின் பேரில் சென்ற தூதுக் குழுவில் தமிழக அரசினரின் பிரதிநிதியாக பக்தவத்சலம் சென்று வந்தார். 1963-ல் அமெரிக்காவில் நடைபெற்ற உலக உணவு மகாநாட்டில் இந்திய கோஷ்டிக்கு, முதலில் முன்னாள் உணவு அமைச்சர் பாடீல் தலைவராக இருந்தார். பிறகு பக்தவத்சலம் தலைவ ராக இருந்து இறுதிவரை மாநாட்டு நட வடிக்கைகளில் பங்கு கொண்டார். அந்த மாநாட்டில் பேசியபோது பக்தவத்சலம் திருக்குறளை மேற்கோளாகக் காட்டி விளக் கிய சம்பவம் செய்தித்தாள்களில் சுவை யான தகவலாக வெளியாயிற்று!

மாமிச உணவைத் தவிர்ப்பதற்காகப் பிரசாரம் செய்து வரும் உலக வெஜிடேரி யன் காங்கிரசின் இந்தியக் கிளைக்கு பக்தவத்சலம் துணைத் தலைவர். சென்னை சங்கீத வித்வத் சபையின் (Music Academy) ஆரம்ப கால நடவடிக்கைகளில் பக்தவத் சலம் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத் திருக்கிறார். தமிழக அரசாங்கம் ஒரே ஒரு தமிழ்ப் புலவனுக்குத்தான் விழா வெடுத்திருக்கிறது — அதற்கு இவரே காரணம். 1962-ல் பாரதியாரின் 81-வது பிறந்த நாளை ஒரு மாபெரும் மக்கள் விழாவாக இவரது தலைமையில் அமைந்த விழாக் குழு நடத்திக் காட்டியது.

சைவ உணவாளரான பக்தவத்சலம் தூய்மையான தனிவாழ்க்கை யுடையவர். ஒழுக்கத்திற்கும், அடக்கத்திற்கும் பிர சித்தி பெற்றது அவரது குடும்பம். எப் போதும் நிதானமாகவே பேசும் இயல் புடையவர் பக்தவத்சலம். கோபம் வந்து அவர் உரத்த குரலில் பேசியதைக் கண்ட வர்களே இல்லை!

பக்தவத்சலம் சிறந்த தமிழ்ப் புலமை உடையவர். ஆங்கிலத்தில் அற்புதமாகப் பேசும் ஆற்றல் படைத்த அவர், பலர் பொதுக்கூட்டங்களில் தமிழில் பேச அஞ்சிய அந்தக் காலத்திலேயே தமிழில் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிறார்.

1962 முதல் பக்தவத்சலம் தமிழக சட்ட மன்றத் தலைவராக இருக்கிறார். சட்டசபையில் அவரது விவாதங்கள் பளிச்சென்று இருக்கும்; நேராகச் சென்று எதிரியைத் தாக்கும். குழப்பமோ, சந்தே கமோ அவற்றில் காண முடியாது.

பக்தவத்சலம் உழைப்பே உழைப்பின் பலன் என்று கருதி வாழ்கிறார். தலைவர் காமராஜ் அவர்களுக்கு உறுதுணையாக இன்றைய தினம் விளங்குகிறார். அவர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழகத்திற்குத் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறோம்.

வாழ்க திரு. பக்தவத்சலம்!

—கருப்பையா



ஆதரிச தம்பதி



தமிழக முதலமைச்சரும் உத்தரப்பிரதேச முதலமைச்சரும்

# பழம்பெரும் தேசபக்தர்

ரா. கிருஷ்ணசாமி நாயுடு
(தலைவர், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி)

இளமை முதல் இன்றுவரை நாட்டின் சுதந்தரத்துக்கும், மக்களின் முன்னேற்றத்துக்குமே நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் வாழ்வு பயன்பட்டு வந்திருக்கிறது. வாழ்நாள் முழுவதும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கும், நாட்டு பணிக்குமே செலவிட்டிருக்கிறார். அவருடைய சொந்த வாழ்க்கையோடு தமிழகத்தின் நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுக் கால வரலாறு பின்னிக் கிடக்கிறது.

அடக்கத்தின் உறைவிடமாகவும், சிறந்த பண்பாளராகவும் விளங்கும் திரு. பக்தவத்சலம் அவரது சிறு பிராயத்திலேயே சுவாமி விவேகானந்தரின் நூல்கள், டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையாரின் ஆவேசமூட்டும் பிரசங்கங்கள், குடும்பத்தில் நிலவிய தேசியச் சூழ்நிலை ஆகியவற்றால் தேசியத் தொண்டுக்கு இழுக்கப்பட்டார். காந்திய இயக்கம் ஆரம்பமானதும் அவருடைய மனம் அதில் பதிந்து விட்டது. வேறெதிலும் சிந்தனை செல்லவில்லை. அன்று முதல் தேச சேவையே தெய்வ சேவை என்று அவர் வாழ்ந்து வருகிறார்.

சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றுள்ள அவர் தொடர்ந்து பல ஆண்டுகளாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகப் பணியாற்றி இருக்கிறார். சில ஆண்டுகள் சென்னை மகாஜன சபைக் காரியதரிசியாக இருந்துள்ளார். இவ்வாறு நீண்ட காலம் ஸ்தாபன ரீதியாகச் செயல்பட்டு வந்துள்ள அவரிடம் கட்டுப்பாடும், பொறுமையும், செயல் திறனும் மிகுந்துள்ளது இயற்கையே.

பழம்பெரும் தேசபக்தருள் ஒருவரான திரு. பக்தவத்சலம் நாட்டு மக்களின் சுபிட்சத்திற்காக இன்றைய தினம் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார். தமிழக முன்னேற்றத்தில் அவருக்குக் கணிசமான பங்கு உண்டு. அவர் பொறுப்பு வகித்துள்ள எல்லாத் துறைகளிலும் அவரது முத்திரையைப் பார்க்கலாம். அறநிலையப் பாதுகாப்புத் துறையில் அவர் ஆற்றி வந்துள்ள சிறந்த தொண்டினைப் பாராட்டாதவர்கள் இல்லை.

பெரியது, சிறியது என்று பேதம் பாராட்டாமல் தமக்கு வாய்த்த பணிகளை மனத்திருப்தியுடன் செய்பவர் நமது முதலமைச்சர். மிகக் கடுமையான உழைப்பாளியாகிய அவர் தமது முதிர்ந்த வயதிலும் இரவு பகல் ஓய்வின்றி உழைக்கிறார்.

குன்றாத தெய்வ பக்தி உடைய அவர் சிறந்த இலக்கிய ரசனையும் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் உடையவர். நிதானமாக, எளிய வார்த்தைகளில், தமது கருத்தை, அசைக்க முடியாத வாதத் திறமையோடு வெளியிடும் ஆற்றல் அவருக்கு இருக்கிறது. அவரைப் புதிதாகப் பார்ப்பவர்களுக்கு அது தெரியாது. தமிழகச் சட்டசபைக்கு வந்து பாருங்கள், அவரது வாதத் திறமையின் முன்பு எதிர்க்கட்சியினர் திணறுவதைக் காணலாம்!

நிர்வாகத்தில் ஒருபழுத்தஆலமரமாக விளங்கும் திரு. பக்தவத்சலம் சுறுசுறுப்புக்கும், ஓய்வு தேடாமல் உழைக்கும் ஆற்றலுக்கும் பிரசித்தி பெற்றவர். இன்றைய இளந்தலைமுறையினர் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய குறிப்பிடத்தக்க நற்பண்புகள் இவையே என்று நான் கருதுகிறேன்.

எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும் அயற்சியுறாமல், நேரம் அதிகமாகிறதே

என்று சோர்ந்துவிடாமல், அமைதியாகப் பணியாற்றுபவர் அவர். ஒரு நாளைக்கு ஏழெட்டு நிகழ்ச்சிகள், நூற்றுக்கணக் கான 'பைல்' கட்டுகள், இடையிடையே பேட்டிகள், அரசாங்க உயர்தர அதிகாரி களோடு சம்பாஷணைகள், நூற்றுக்கணக் கான மைல்கள் காரிலேயே சுற்றுப்பய ணம் - இவ்வாறு அவரது தினசரிப் பணிகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். அதற்காக அவர் சளைப்பது இல்லை.

கீதை சொல்லுவதுபோல, ''நிஷ்காமிய கர்மம்'' புரிந்து வரும் கர்மயோகி அவர். இளைஞர்கள் அனைவரும் இந்தப் பண் பினை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் வற் புறுத்துகின்றேன்.

அவரது பிறந்த நாளையொட்டி சமீ பத்தில் சென்னையில் நடைபெற்ற கூட்ட மொன்றில் கேரள கவர்னர் திரு. கிரி அவர் கள் தலைமையில் மைசூர், மகாராஷ்டிரம், பாண்டிச்சேரி ராஜ்யங்களின் முதலமைச் சர்களும், மத்திய அமைச்சர் திரு. பாடீல் அவர்களும் கலந்து கொண்டு திரு. பக்த வத்சலம் அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

இந்தியாவிலேயே தமிழகம் சிறந்த ராஜ்யமாக விளங்குகிறது என்று கூறிய அவர்கள் அனைவரும் தலைவர்கள் காம ராஜ், பக்தவத்சலம் ஆகியோரின் சேவை களை மிகவும் புகழ்ந்தார்கள். எங்களுக் கெல்லாம் பரம திருப்தி. ''ஈன்ற பொழு திற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான் றோன் எனக் கேட்ட தாய்'' என்ற குறளில் வரும் தாயின் பரவச நிலையில் நாங்கள் எல்லோரும் இருந்தோம்.

தமிழகத்திற்கும், பாரத நாட்டிற்கும் பெருமை தேடித்தரும் இத்தகைய தலைவர் களுடன் சேர்ந்து தொண்டாற்றுவதைப் பெரும் பாக்கியமாக நாங்கள் கருது கிறோம். தலைவர்களின் பெருமைக்கேற்ப நாமனைவரும் நமது பங்கினைச் செய்தாக வேண்டும். சென்னையில் இருந்தாலும், டில்லியில் இருந்தாலும் அதுவே நம் இலட்சியமாக இருக்க வேண்டும்.

வாழ்க பக்தவத்சலம்! வாழ்க பல்லாண்டு! வாழ்க பாரதம்!

*[1965-ல் டில்லியில் வெளியிடப்பட்ட ஒரு சிறப்பு மலருக்காக எழுதப்பட்ட கட்டுரை.]*


தந்தி : சென்டெக்ஸ் போன் : 32 & 38

## சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

**சென்னிமலை**

**சென்டெக்ஸ்**

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள்,
நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள்

**தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் சிறந்தவை.**

**சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.**

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து. பி.ஏ., பி.எல்.,
தலைவர்.

# கூட்டுறவும் முதலமைச்சரும்

என். எஸ். எஸ். மன்ருடியார்
(தமிழகக் கூட்டுறவு அமைச்சர்)

கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குக் கூட்டுறவு சிறந்த வழி. வளமான வாழ்வுக்கு வழிதேடும் மக்களைச் செம்மையான பாதையில் அழைத்துச் செல்வதே கூட்டுறவு இயக்க மாகும். ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்ற உண்மையைக் கூட்டுறவு இயக்கம் மெய்ப்பித்து வருவதை நாட்டில் கண் கூடாகக் கண்டு வருகிரோம்.

**நீண்டகாலப் பணியின் சிறப்பு**

உலகெங்கும் பரவியுள்ள இந்த இயக் கம் தமிழகத்தில் வேருன்றி வளர நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த இருபத் தைந்தாண்டுகளாக ஆற்றி வந்திருக்கும் பணியின் சிறப்பை எவரும் மறந்து விட முடியாது. அமைச்சராகவும், செம்மை யான நெறியை வளர்த்த புலவர் பெரு மகனுகவும் விளங்கிய சேக்கிழாருக்கு ஒப்பானவராகப் போற்றப்படுபவர், நம் முடைய முதலமைச்சர்.

**விவசாயி வளர்ச்சிக்குப் பேருதவி**

வேளாளர் மரபில் வந்த அவருக்கு, வேளாளர் நலம் பேணும் கூட்டுறவு இயக்கத்தில் அவருக்கிருந்த ஆர்வம் ஏற்பட்டிருப்பது இயல்பான ஒன்றே ஆகும். பண நெருக்கடியால் அவதிப்படும் குடியானவர்களுக்குப் பெரிதும் உதவியாகக் கூட்டுறவு முறை இருப் பதை உணர்ந்து, அதன் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி வந்திருக் கிருர்.

கிராம விவசாயிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது கடன். குறித்த காலத் தில், தேவைப்பட்ட அளவுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதற்கு, கிராம நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போது தமிழகத்தில் ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு வசதி யைப் பெற்றிருக்கிறது.

**குறித்த காலத்தில் கடன்**

தமிழகஅமைச்சரவைகளில் தொடர்ந்து இடம் பெற்று வந்திருக்கும் நம்முடைய முதலமைச்சர் தம் ஆற்றலையும் அனுபவத் தையும் கூட்டுறவுத் துறை வளர்ச்சிக் காகப் பயன்படுத்தி வந்திருப்பதையும், இன்று கூட்டுறவு முறையை எல்லாத் துறைகளிலும் விரிவுபடுத்த அவர் மேற் கொண்டுவரும் அரியபணிகளையும் தமிழக மக்கள் மனமாரப் போற்றுகின்றனர்.

**உற்பத்தி பெருக உதவி**

கடன்கள் உணவு உற்பத்திப் பெருக் கத்திற்குப் பெரிதும் பயன்பட வேண்டும் என்பதுதான் இவரது லட்சியம். அந்த அடிப்படையில் தீவிர விவசாயத் திட்டம் 1965–ம் ஆண்டில் துவக்கப்பட்டு, நான்கு மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் வியாபாரப் பயிர்க ளுக்கான தீவிர உற்பத்திப் பெருக்கத்திட் டமும் செயல்பட்டு வருகிறது.

**ரசாயன உரங்கள் விநியோகம்**

இத்திட்டங்களின் கீழ்வரும் பயிர் களுக்கு அதிகப்படியான உரமும்,

பயிர் பாதுகாப்பு முறைகளும் தேவைப் படுவதால், போதிய உரங்களையும், பயிர்நோய் தடுப்பு சாதனங்களையும் குடியானவர்களுக்கு விநியோகிக்கும் பொறுப்பைக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. பொதுவாக நம்முடைய மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்றுக்கு சுமார் 3 லட்சம் டன் ரசாயன உரங்களைக் குடியானவர்களுக்கு விநியோகித்து வருகின்றன என்பது குறிப்பிடக்தக்க அம்சமாகும்.

**ஆண்டுக் கடன் திட்டம்**

கூட்டுறவுச் சங்க அங்கத்தினருக்கு நபர் ஜாமீன் பேரில் ரூ. 2,000 வரையிலும் அடமானத்தில் பேரில் ரூ. 10,000 வரையிலும் கடன் கொடுக்க வகை செய்யும் வண்ணம் சங்க விதிகள் திருத்தப்பட்டுள்ளன. சாகுபடிக் கடன் திட்டத்தில் மற்ருெரு குறிப்பிடத்தக்க மாறுதல் ஆண்டுக் கடன் திட்டமாகும். இதன்படி, ஒருவர் தான் ஒரு ஆண்டில் பயிரிட உத்தேசித்திருக்கும் எல்லாப் பயிர்களுக்கும் சேர்த்து கடன் மனுவை முதலிலேயே கொடுத்து அனுமதி பெற்றுக் கொள்ளலாம். பிறகு அந்தந்தப் பயிர்களைப் பயிரிடும்போது, தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**விற்பனைப் பண்டக சாலைகள்**

அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தவும், நியாய விலையில் மக்களுக்குப் பண்டங்கள் கிடைக்கவும் கூட்டுறவு முறையின் மூலம் பண்டங்களை விநியோகிக்கும் ஏற்பாட்டை நம் முதலமைச்சர் பெரிதும் ஊக்குவித்தார். அதன் விளைவாக மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், பிரதம பண்டகசாலைகளும், தொழிலாளர்களுக்கான பண்டகசாலைகளும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டன. அவை வெற்றிகரமாகச் செயல்பட பெருமளவில் உதவித் தொகைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

**அரசாங்க ஊழியருக்கு உதவி**

அரசாங்க ஊழியர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலையில் வாங்கிக் கொள்ளத் தக்க தனி பண்டகசாலைகள் நிறுவ முதலமைச்சர் வழி செய்தார். இவற்றில் சேரும் அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு மாதங்களில் திருப்பிச் செலுத்தும் வகையில் ரூ. 75 முன் பணம் அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனுல் பெரும்பாலான அரசாங்க ஊழியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**விநியோகப் பணியில் மகளிர்**

அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்யும் சங்கங்களில் பெண்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தால் அந்தச் சங்கங்கள் நன்கு இயங்கும் என்ற நம்முடைய முதலமைச்சர் கருத்தின் விளைவாக, சென்னை நகரிலும், மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களிலும் மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் துவக்கப்பட்டன. சென்னை நகரில் மட்டும் 12 பண்டகசாலைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

**கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள்**

மேலும், சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றுமாக, ஆறு கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் நிறுவ முதலமைச்சர் தனி அக்கறை செலுத்தினுர். இன்று நான்கு சிறப்பு அங்காடிகள் பெருவாரியான மக்களுக்கு நியாய விலையில் பண்டங்களை விநியோகித்து வருகின்றன.

இங்ஙனம், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், நியாய விலையில் மக்கள் பண்டங்களைப் பெறவும் கூட்டுறவு முறையை முதலமைச்சர் அவர்கள் உறுதுணையாக்கி வருவது, அந்த இயக்கம் மேலும் மேலும் மக்களிடையே வேரூன்ற அடிகோலியிருக்கிறது.

**மக்கள் ஆதரவு நிச்சயம்**

விவசாயிகளின் நலன்கள் பெருகவும், கிராமத் தொழில்கள் வளரவும், கிராமப் பொருளாதாரம் சிறக்கவும் கூட்டுறவு இயக்கப் பணிகள் மேலும் மேலும் செம்மையாக நடைபெற்ருல் நம் நாடு மேலும் உன்னத நிலையை அடையும் என்பதுதான் நம் முதலமைச்சரின் ஆழ்ந்த நம்பிக்கையாகும். பொது மக்களின் ஆதரவு அந்த நம்பிக்கையை ஈடேற்றும் என்பது திண்ணம்.

# தமிழரில் தமிழராக வாழ்பவர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

இந்தியாவில் தமிழ்நாடு இன்று ஓர் அமைதி பெற்று விளங்குகிறது. கேரளாவில் மந்திரிசபை முறிந்தது. ஆந்திராவில் முன்னொரு முதலமைச்சர் வேலையை விட வேண்டியிருந்தது. ஒரிஸ்ஸாவில் முதலமைச்சரைத் தேட வேண்டி இருக்கின்றது. பஞ்சாபில் முதலமைச்சர் முன்னே இருந்த இடம் தெரியாமல் கீழே விழுந்தார். உத்தரப் பிரதேசத்தில் சட்டசபையை நடத்த முடியாத அளவுக்கு இந்தி வெறியர்கள் கைவரிசை காட்டினார்கள். இந்த நிலைமை தமிழ் நாட்டில் இல்லை. இந்தியாவுக்கே வழிகாட்டும் அளவுக்குத் தமிழ் நாட்டு அரசியற் கலை வளர்ந்தோங்கி உள்ளது.

### ஒருமையை நிலைநாட்டிய தலைவர்

உயர்திரு நேரு அவர்கள் மறைந்ததும் ''தலைவர் போட்டி'' நாட்டையே குலைக்குமென நம்பியோர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் ஏமாந்து போகும்படி, தமிழ் நாட்டுத் தலைவர்தான் ஒருமையை நிலைநாட்டி உலகையே மகிழச் செய்தார். அத்தகைய காமராஜர் சென்னை அரசினை விட்ட பின், முன்னிருந்த சிறப்பானது தமிழ் நாட்டிற்கு நிலைக்குமா என்று அச்சப்பட்டவர்களும் உண்டு. ஆனால், அந்த அச்சம் இப்போது யாருக்கும் இல்லை.

திரு. பக்தவத்சலம் தமிழ் நாட்டுப் பண்பாட்டின் உருவமாக இருந்து இந்தச் சிறப்பை நமக்குத் தேடிக் கொடுத்துள்ளார். இதில் இந்நாட்டு அரசியற் கட்சிகளுக்கும் பங்கு உண்டு.

### எளிய தமிழனின் பிரதிநிதி

திரு. காமராஜரைப் பார்க்கும் போதெல்லாம் எளிய தமிழனின் தோற்றமே மனத்திற்கு வருகிறது. அவருடைய வாழ்க்கை எல்லோருக்கும் தெள்ளத் தெரிந்த ஒன்று. கல்லூரிக்கும் போகாமல், பண்டிதர்கள் அறிவில் பழகாமல் இருந்தாலும் மனிதத் தன்மை மட்டும் இருந்தால் உயர்ந்த சித்தராக வாழ முடியும் என்பது தமிழ்நாட்டின் நம்பிக்கை. காமராஜர் அத்தகைய வெள்ளை வேட்டிச் சித்தர். காந்தீயத்தைக் கைப்பிடித்து அவர் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊரையும், ஒவ்வொரு ஆளையும் உணர்ந்து தமிழ்நாடாகவே ஆகிவிட்டவர். இதனால் அறிவாராய்ச்சிப் பேச்சுப்பேசி அலைவதை விட்டுச் செயல்படவே முந்துகின்ற கருமவீரராகவும் ஆகி விட்டார்.

### காமராஜ் வழியில் பக்தவத்சலம்

திரு. பக்தவத்சலம் கல்லூரிக் கல்வியில் தேர்ந்தவர்-வக்கீல் பட்டம் பெற்றவர் -சேக்கிழார் பரம்பரை – செல்வத்தின் தொடர்பும் உடையவர் - இவையெல்லாம் ஒருவகையில் இக்கட்டுக்கள்தாம். இத்தனைக் கட்டுக்களையும் உடைத்தெறிந்து மக்களோடு மக்களாய் வாழ்வது அருமை. ஆனால் அந்த அற்புதத்தைத் திரு. பக்தவத்சலம் செய்து முடித்துள்ளார்.

### காந்தியடிகளின் அடிச்சுவட்டில்

அவர் மிகப் பழைய காங்கிரஸ்வாதி. அவரை 1924-ல் இருந்து நான்

அறிவேன். அந்தக் காந்தி யுகத்தில் நாட்டிலேயே ஒரு புதிய மன நிலைமை எங்கும் நிலவியது. அன்பிலே ஒரு நம்பிக்கை; உண்மையிலே ஒரு ஊக்கம்; பிறர்க்கு உழைப்பதிலே ஒரு தெம்பு; தன்னலத்தைப் பாராத ஒரு தனிப் பெருமை – இவையெல்லாம் இளைஞர்கள் வாழ்க்கையை உருவாக்கிக் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் செல்ல அவர்களைப் பிடர்பிடித்து உந்தின. அப்படி உந்தப் பெற்ற இளைஞர்களில் திரு. பக்தவத்சலமும் ஒருவர். கல்லூரியில் கற்ற படிப்பையெல்லாம் காந்தியடிகளின் கீழ்த்திருப்பிப் படிக்க வேண்டியதாயிற்று. அந்த அரை நிர்வாணப் பக்கிரியின் முன் செல்வத்தின் சிறப்பும், குடிப்பெருமையும் எங்கே தோன்றும்? ஒழுக்கமே செல்வம்; உண்மையே உயர்ந்த குடி; அன்பு நிறைந்த தொண்டே அறிவின் நிறைவு என்றன்றோ தோன்றிற்று!

**தமிழரில்**
**தமிழராக**
**வாழ்பவர்**

''எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்று பாரதியார் பாட்டைப் பாடிக்கொண்டு ஊர் ஊராய்ச் சென்ற இளைஞர்களுக்கு மனிதனை மனிதனுய்க் காண்பதன்றி வேறு என்ன தோன்றும்? எவ்வளவு பெரிய செல்வர்கள்! எவ்வளவு பெரிய அறிஞர்கள்! இவர்கள் எல்லாம் அடங்கி ஒடுங்கிக் காந்தியின் பின் சென்ற போது செல்வச் செருக்கும், கல்விச் செருக்கும், சாதிச் செருக்கும் எவ்வாறு தலைகாட்ட முடியும்? அதிலும் திரு. பக்தவத்சலம் காலஞ்சென்ற தமிழ்நாட்டுத் தலைவர் திரு. முத்துரங்க முதலியாரின் கீழே அரசியலில் வளர்ந்தவர். இந்த வகையாலெல்லாம் தம்மைச் சுற்றிய கட்டுக்களை அறுத்தெறிந்து தமிழரில் தமிழராக வாழ வந்தார்.

**அனைத்தும்**
**அறிந்த**
**மேதை**

இவரும் தமிழ்நாட்டு ஊர்களையெல்லாம் அறிவார். தமிழ்நாட்டுத் தொண்டர்களை அறிவார். தொண்டருள் தொண்டராக வாழ்ந்த இவர் தமிழருள்ளத்தை நன்ருக அறிவார். காங்கிரஸ் நிலையங்களின் உளவை எல்லாம் அறிவார். உரிமைப் போரில் சிறையில் தவஞ்செய்து, உரிமை வேட்கை இன்னது என்பதை நேரில் உணர்ந்தவர். அரசியல் கலையையும், அதிற் சிறந்தவர்களோடும் கலந்து பழகியவர். பிற அரசியல் கலைஞரையும் இளமையில் இருந்தே நன்ருக அறிந்தவர்.

**நீண்டகால**
**நிர்வாக**
**அனுபவம்**

சென்னை நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராக இருந்தவர். அப்போது தம் கட்சியிலிருந்த ஊழலையும் போக்கப் பெரிதும் முயன்றவர். பின்னர்ச் சட்ட சபையில் புகுந்து அமைச்சரின் செயலாளராக விளங்கினுர். முப்பது ஆண்டுகளாகச் சட்டசபையின் நுட்பமெல்லாம் அறிந்து வருகிருர். இந்தியா உரிமை பெற்றதிலிருந்து ஏறக் குறைய தொடர்ந்து மந்திரியாக இருக்கும் வாய்ப்பும் பெற்ருர். அதனுல் அரசாங்கத் துறையில்அனைத்தையும் அறிவார்.

**ஒப்பற்ற**
**தகுதி**
**பெற்றவர்**

அரசாங்க அலுவலாளர்கள் அனைவரும் அவருக்குத் தெரியும். ஊரில் பெரிய மனிதர்களோடும் தொண்டர்களோடும் நெருங்கிப் பழகியவர். அவர் பாராத ஊர் இல்லை; அறியாத மக்களில்லை. அனைத்திந்திய அறிவும் உண்டு. இவையனைத்தும் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருப்பதற்கேற்ற ஒப்பற்ற தகுதியை இவருக்குத் தேடித் தந்துள்ளன.

**அன்பினுல்**
**பிணைக்கும்**
**அண்ணல்**

இவரும் ஒரு கருமயோகி. ஆனுல் நீண்ட பேச்சுக்களும் பேசுவார். கேட்பவர் வாயைப் பிளந்து கேட்கவேண்டுமென்பதல்ல இவருடைய நோக்கம். கேட்பவர் உள்ளமும், பேசுகின்ற இவர் உள்ளமும், ஒன்ருக அன்பினுல் பிணைந்து கொள்ள வேண்டுமென்பதே இவருடைய பேச்சின் நோக்கம். உணர்ச்சி வயப்பட்ட பேச்சல்ல இவர் பேச்சு. உணர்ச்சி கண்ணை மறைக்கும்; அறிவை மயக்கும். மறைப்பையெல்லாம் திறக்கவே இவர் பாடுபடுகின்றவர்.

**மனிதத்தன்மை மிகுந்தவர்**

செய்ய முடிந்ததை அப்போதே செய்து முடிப்பவர். யார் மனமும் புண்படாமல் வாழ முயல்பவர். காலையிலிருந்து நள்ளிரவு வரையில் தம்மைப் பார்க்க வருபவர்களைப் பார்த்து, பேசி, ஆறுதல் அளிப்பதையே நோன்பாகக் கொண்டுள்ளவர். இந்தநோன்பே காமராஜருக்குப்போல இவருக்கும் மனிதத்தன்மை உண்டென்பதை நிலை நாட்டியுள்ளது. கையுடைந்து மருத்துவ நிலையத்தில் இருந்த பொழுதும் இந்த நோன்பை இவர் கைவிடவில்லை.

**கடவுள் காப்பாற்றினார்**

கையுடைந்தது ஒரு வியப்பு. வண்டி நொறுங்கியிருந்ததைக் கண்டால் உள்ளிருந்தவர்கள் எப்படிப் பிழைத்தார்கள் என்றே கேட்கத் தோன்றும். கடவுளிடத்திலும், கோயில்களிலும் பெரும் நம்பிக்கையுடைய இவர் கடவுளாலேயே காப்பாற்றப்பட்டார் என்று கடவுள் நம்பிக்கையுடையவர்கள் நம்புவார்கள்.

**வியப்புக்குரிய பணிகள்**

முதல் மந்திரி அலுவல்களை ஒன்றையும் தள்ளிப்போடாமல் அன்றன்றே முடித்து விடுவார். இதற்கிடையே வருகிறவர்களையும் பார்த்துப் பேசிக்கொண்டே அலுவலகக் கட்டுகளையும் பார்த்துப் படித்துக்கொண்டு அரசியல் தொண்டைச் செய்து வருவார். இது மட்டுமா? ஒரு நாளில் எத்தனை கூட்டங்கள்! எவ்வளவு தொலைவான ஊரிலுள்ள கூட்டங்கள்! எப்படித்தான் இவர் டில்லிக்கும் சென்னைக்குமாக விமானத்தில் பறந்தும், பறந்து வந்தவுடன் அலுவலகத்திற்குச் செல்வதோடு பல கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார் என்பதே ஒரு பெரிய வியப்பு.

**பொறுமை மிக்க பண்பாளர்**

அதிலும் அறுபத்தேழு ஆண்டுகள் கடந்த பின்னும் இவ்வாறு குழந்தை போல ஈடுபடுவது இன்னும் பெருவியப்பு. தொடர்ந்து பலரையும் பல கருத்துக்களையும் கண்டு வரும்போது, முடியாததையெல்லாம், பொருந்தாததையெல்லாம் அவர்கள் சொல்லி வரும்போது, சிறிதும் முகம் கோணாது கேட்டு வருகின்ற பொறுமையை என்னென்பது? இவையெல்லாம் ஒரு பெரிய உண்மையான யோகிக்கே முடிவதொன்றாகும்.

**தமிழர் உள்ளத்தில் இடம் பெற்றவர்**

கையொடிந்த நிலையிலும், ஊர் ஊராகச் சென்று கூட்டம் கூட்டமாகப் பேசி மாணவர் சிக்கலையும், தொழிலாளர் சிக்கலையும், அரசியற் சிக்கலையும் தீர்த்து வருவதைக் காணும்போது எந்தத் தமிழன் உள்ளந்தான் குழையாது? தன் இன்ப துன்பத்தோடு சேர்ந்து அவருடைய உள்ளமும் ஒன்றாகத் துடிக்கிறது என்றே அவரைக் காணும்போது ஒவ்வொரு தமிழனும் நினைக்கின்றான். இந்த உண்மையை வெளியாக்கத்தான் கடவுளே அவருடைய கையை உடைத்துக் காட்டினாரோ என்று கூடக் கடவுள் அன்பர்கள் பேசலாம்!

வாழ்க பக்தவத்சலனார்!
வாழ்க உலகெலாம்!

*(பக்தவத்சலம் 68-வது பிறந்த தின மலரிலிருந்து)*

---

பக்தவத்சலம் குரல்

## ஒற்றுமை

சமயம், சமூக உறவு ஆகியவைகளிலும் காலமெல்லாம் ஒருவிதமான பிணைப்பு இருந்து வந்திருக்கிறது. ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு மூலைகளில் நான்கு மடங்களை ஏற்படுத்தினார். வடக்கே ஜோதிர் மடம், மேற்கே துவாரகா மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம் ஆகியவை அவர் ஏற்படுத்தியவை ஆகும்.

வட இந்தியாவிலிருந்து தல யாத்திரை புறப்பட்டவர்கள் ராமேஸ்வரம் வந்தனர். தென்னிந்தியாவிலிருந்து தல யாத்திரை சென்ற யாத்ரீகர் காசியைத் தரிசிப்பதைப் பெரும் பேறாகக் கருதினர்.

நமது இதிகாசங்கள், கதைகள், சங்க கால நூல்கள் பலவும் தேச ஒருமைப்பாட்டை உயிர் மூச்சாகக் கொண்டுள்ளன. இந்த நாட்டின் கலாசாரம் ஒன்றுடன் ஒன்று பிணைந்த மணிமாலை போன்றது.

# தொண்டர் வாழ்க!

உழைத்துக் கொண்டே யிருப்பார்—செயலில்
உறக்கம் இன்றியே உண்மைத் தொண்டராய்
உழைத்துக் கொண்டே யிருப்பார்.

மக்கள் படும்துயர் மேதினி மீதினில்
மாய்ந்திடச் செய்வதற்கே—தினம்
தக்கந லத்தினை தன்னறி வாற்றலினுல்
தந்தவர் உயர்ந்து விட்டார்!
மிக்க புகழ்தனை நற்பணி யாத்ததிலே
மெய்வழித் தொண்ட ரென்ருர் — அவர்
பக்குவ மாகவே நற்றமிழ் நாட்டிலிங்கு
பற்பல துறையினிலே

உழைத்துக் கொண்டே யிருப்பார் — செயலில்
உறக்கம் இன்றியே உண்மைத் தொண்டராய்
உழைத்துக் கொண்டே யிருப்பார்.

நெஞ்சத்துக் கோயிலில் நேர்மை நெறியங்கு
நின்றுள்ள போதிலேதான் — தீயோர்
வஞ்சிக்கும் எண்ணத்தை மாற்றி அமைத்திட
வகையோடு பணிபுரிவார்!
அஞ்சாத உள்ளத்தால் ஆற்றல் பலபுரிந்து
அவரிங்கு நின்றுவிட்டார்!
கொஞ்சுதமிழ்ச்சுவைபோல குலேவாழைப் பயன்தன்னைக்
கொடுத்தோய் நீ யாண்டும் வாழி!

உழைத்துக் கொண்டே யிருப்பார் — செயலில்
உறக்கம் இன்றியே உண்மைத் தொண்டராய்
உழைத்துக் கொண்டே யிருப்பார்.

-ஈரோடு ஆற்றலரசு



ஆசிய ஜோதியும் நிர்வாக மேதையும்



நேருஜி, காமராஜ், சி. சுப்பிரமணியம் ஆகியோருடன் தமிழக முதலமைச்சர்

தமிழ்நாடு ஆவணக்காப்பக இயக்ககம் சென்னை-600 008

பக்தவத்சலம் பணிகள்:

# சேவைக்கு இலக்கணம் வகுத்த செம்மல்

கருப்பையா பி. ஏ.

சேவைக்கு இலக்கணம் வகுத்தவர் பக்த வத்சலம். மக்கள் முன்னேற்றத்திற்காக நீண்ட காலமாக அவர் தன்னலம் கருதாமல் உழைத்து வருகிறார். 1937-ம் வருடத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் ராஜாஜியின் தலைமை யில் முதன் முதலாகக் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது. ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்குப் பார்லிமெண்டரி காரியதரிசியாக பக்தவத் சலம், அந்த மந்திரி சபையில் இடம் பெற்றார்.

## ஸ்தல ஸ்தாபன அமைப்புக்கு ஒரு அடிப்படை

ஸ்தல ஸ்தாபன விவகாரங்களை ஆராய்வ தற்கு ஒரு சந்தர்ப்பமாக அதை அவர் எடுத்துக் கொண்டார். ஸ்தல ஸ்தாபன நிர்வாக அதிகாரிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்படும். அது சம்பந்தமாக பக்தவத்சலம் சில விதிமுறை களைத் தயாரித்தார். சட்டசபை காங்கிரஸ் கட்சியில் ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்காக அமைக்கப்பட்ட குழுவுக்குக் 'கன்வீனர்' என்ற வகையில் அவர் அப்போது தயாரித்து அளித்த அறிக்கை இன்றைய ஸ்தல ஸ்தாபன அமைப்புக்கே அடிப்படையாக விளங்குகிறது.

டி. பிரகாசம், ஓ. பி. இராமசாமி ரெட் டியார், பி. எஸ். குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராஜ் ஆகியவர்கள் அமைத்த மந்திரி சபைகள் எல்லாவற்றிலும் பக்தவத்சலம் இடம் பெற்றுப் பணியாற்றினார்.

## பொறி இயல் பணித்துறை அமைச்சர்

1946-ம் வருடம் ஏப்ரல் மாதம் டி. பிரகா சம் அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அதில் பக்தவத்சலம் பொறி இயல் பணித்துறை மந்திரியாகத் தொண்டாற்றினார். இராமசாமி ரெட்டியார், பி. எஸ். குமாரசாமி ராஜா ஆகியோரது மந்திரி சபைகளில் அதே பொறுப்பு தொடர்ந்தது.

1953-ம் வருடம் அக்டோபர் மாதம், ராஜாஜி மந்திரி சபையில் பக்தவத்சலம் உறுப் பினர் ஆனார். காடுகள், மீன்துறை, சின்கோனா, கிராம நலம், சமுதாய அபிவிருத்தி, தேசிய வளர்ச்சித்திட்டம் முதலிய துறைகள் அவரு டைய பொறுப்பில் செயல்பட்டன.

## காமராஜ் தலைமையில் தொண்டு

1954-ம் ஆண்டில் தலைவர் காமராஜ் அவர்கள் தமிழக முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். பக்தவத்சலத்தின் பணி அவரது தலைமையிலும் தொடர்ந்தது. ராஜாஜி மந்திரி சபையில் வகித்து வந்த துறைகளோடு, கால்நடை பராமரிப்புத்துறை, தொழிலாளர் நலம், தொழில்துறை, மாதர் நலம் ஆகியவற் றையும் அவர் மேற்கொண்டார்.

1957-ம் வருடத்தில் இரண்டாவது பொதுத் தேர்தல்கள் நடந்தன. தமிழகத்தில் மீண்டும் தலைவர் காமராஜ் அவர்களது மந்திரி சபை அமைந்தது. அதில் பக்தவத்சலம் உள்துறை அமைச்சரானார். உணவு, விவசாயம், கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள், போலீஸ், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், கால்நடை பராமரிப்புத்துறை, காடுகள், சின்கோனா, இந்துமத பரிபாலனம் முதலிய அனைத்தும் அவருடைய பொறுப்பில் இருந்தன.

**நிர்வாகத்
தலைமைப்
பொறுப்பு**

1962-ம் ஆண்டில் மூன்றாவது பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு தலைவர் காமராஜ் அவர்களது மந்திரி சபையில் பக்தவத்சலம் நிதியமைச்சராகப் பணியாற்றினார். கல்வி, தொழிலாளர் நலம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், கதர் மற்றும் கிராமத் தொழில்கள், இந்துமத பரிபாலனம் ஆகியவையும் அவரிடம் இருந்தன.

1963-ம் வருடம் அக்டோபர் மாதம் 'காமராஜ் திட்ட'ப்படி தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார். அன்று பக்தவத்சலம் அவர்களை முதலமைச்சராகக்கொண்ட அமைச் சரவை பொறுப்பேற்றது. அன்று முதல் தமிழ கத்தின் அரசாங்கத்தை அவர் சிறப்பாகத் தலைமை வகித்து நடத்தி வருகிறார்.

**எல்லாத்
துறைகளிலும்
சேவை**

பொதுவாக, இரண்டொரு துறைகளைத் தவிர ஏறத்தாழ மற்றெல்லாத் துறைகளிலும் பக்தவத்சலத்தின் கடுமையான உழைப்பையும், பல்லாண்டுக்கால அனுபவத்தையும், திறமை யான திட்டங்களையும், நிர்வாகத்தின் பல கூறு களை வெகு நுட்பமாக இணைத்துச் சென்று காரியமாற்றும் ஆற்றலையும் காண்கிறோம்.

பக்தவத்சலம் சிறந்த சிந்தனையாளர். தமக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு துறையையும் முதலில் வெகு கவனமாக ஆராய்வார். பிறகு மக்களுக்கு அந்தத் துறையின் மூலமாக எந்த விதத்தில் சேவை செய்யலாம் என்று யோசிப் பார். புதிய திட்டங்களை வகுப்பார். அதிகாரி களிடம் நயம்பட உரைப்பார். நிர்வாகச் சிக்கல்களை அபார சாமர்த்தியத்துடன் களைந் தெறிவார். திட்டங்கள் நிறைவேறுகிறவரை யில் கவனமாகக் கண்காணிப்பார். பிறகு, அடுத்த திட்டத்தை யோசிக்க ஆரம்பித்து விடுவார்!

**பயன்தரும்
நீர்ப்பாசனத்
திட்டங்கள்**

பொறி இயல் பணித்துறை அமைச்சராகப் பல விவேகமான கொள்கைகளையும், நடை முறைகளையும் பக்தவத்சலம் அறிமுகப்படுத் தினார். நீண்டகால அளவில் பயன்தரக்கூடி யவை, குறுகிய கால அளவில் நன்மை அளிப்பவை, இடைக்கால அளவில் பயன் தருபவை எனப் பலவாறாக நீர்ப்பாசனத் திட்டங்கள் பிரிக்கப்பட்டன. விவசாய முன்னேற்றம், போதிய அளவு உணவு உற்பத்தி ஆகிய இரண்டு இலக்குகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

கீழ்பவானித் திட்டம், மேட்டூர் கால்வாய் திட்டம், மணிமுத்தாறு திட்டம் முதலிய வற்றுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கிற்று. 1950-ம் ஆண்டு நவம்பர் மாதம், பொறி இயல் பணித்துறை அமைச்சரான பக்தவத் சலம் மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டத் தைத் தொடங்கி வைத்தார். திருநெல்வேலி மாவட்ட வரலாற்றில் அது ஒரு மகத்தான நிகழ்ச்சி. அந்தத்திட்டம் 1958-ல் நிறைவு பெற்றது. அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஐந்து தாலுகாக்களுக்கு அது நீர்ப் பாசன வசதி தருகிறது.

**நீர்வளம்
பெருக்கிய
பெருந்தகை**

1951-ம் ஆண்டில் ஆரணியாறு திட்டத்தை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு அது பாசன வசதி அளிப்பதாகும். 1960-ல் அது ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப் பட்டது.

மேட்டூர் கால்வாய்த் திட்டம் சேலம், கோவை மாவட்டங்களில், 45,000 ஏக்கர்

நிலங்களுக்குப் பயன்தரும் வகையில், *1949*–ம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. குறுகிய காலத்தில் பயன்தர வேண்டும் என்ற கருத்தோடு குளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமும் அதே ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் அந்தத்திட்டத்தினால் பல எளிய விவசாயிகள் பலனடைந்தார்கள். காவேரி டெல்டா வடிகால் திட்டமும் அப்போதே தொடங்கப்பட்டு விட்டது.

**நூற்றி ஐம்பது**
**ஆண்டுகளில்**
**செய்யாததை**
**ஐந்து**
**ஆண்டுகளில்**
**முடித்தார்**

நீர்ப்பாசனம்தான் விவசாயத்தின் உயிர் நாடி என்று சொல்லலாம். அந்நியர்கள் ஆண்டபோது நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவது பற்றி அவர்கள் அக்கரை காட்டியதே இல்லை. **150** வருடங்கள் ஆண்ட வெள்ளைக்காரர்கள் சென்னை மாகாணத்தில்நீர்ப்பாசனத்திற்காக செலவழித்த தொகை வெறும் **18** கோடி ரூபாய்தான். காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, பக்தவத்சலம் பொறி இயல் பணித்துறை அமைச்சராக இருந்த ஐந்தாண்டு காலத்தில் மட்டும் **28** கோடி ரூபாய்க்கு மேல் நீர்ப்பாசனத்திற்காக செலவிடப்பட்டது.

**மின்சார**
**உற்பத்தித்**
**திட்டங்கள்**

அதே கால கட்டத்தில் மின்சார உற்பத்தியும் மளமளவென்று பெருகிற்று. மோயார் நீர் மின்சாரத் திட்டம், பைகாரா விஸ்தரிப்புத் திட்டம் (மூன்றும் நிலை), பாபநாசம் விஸ்தரிப் புத்திட்டம் (இரண்டாம் நிலை), சென்னை யந்திர விஸ்தரிப்புத் திட்டம், மதுரை அனல் மின்சார நிலையம் ஆகிய அனைத்தும் மேற்கொள்ளப் பட்டன.

*1946*–ம் ஆண்டில் *98,100* கிலோ வாட்டாக இருந்த மின்சார உற்பத்தி பக்தவத்சலத்தின் பெருமுயற்சியால் *1951*-ல் *1,83,000* கிலோ வாட்டாகப் பெருகிற்று. கிராமப்புறங்களை மின்சார மயமாக்குவதில் இந்தியாவிலேயே சென்னை ராஜ்யம் முதலிடம் வகிக்கத் தொடங்கியது.

**தொழிலுக்கும்**
**உழவுக்கும்**
**மின்சாரம்**

*1946*–ல் *1003* கிராமங்களும் சிறுநகரங்களும் மின்வசதி பெற்றிருந்தன. *1951*–ம் ஆண்டு இறுதியில் **1800** கிராமங்கள் மின்சார வசதி பெற்று விட்டன. *16,500* விவசாய பம்பு செட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. கிராமத் தொழில்களுக்கும் மின் வசதி கிடைக்கத் தொடங்கியது.

*1949*–ம் ஆண்டில் ஒரு முக்கியமான சட்டம் நிறைவேற்றப் பட்டது. ராஜ்யத்தில் இருந்த தனியார், ஸ்தல ஸ்தாபன மின்சார அமைப்புகளை அரசாங்கம் தேசிய மயமாக்குவதற்கு அந்தச் சட்டம் வழி வகுத்தது. இதன் விளைவாக, **1950–51**-ல் இந்த மாகாணத்தின் மின்சார உற்பத்தியில் *99* சதவிகிதத்திற்கு அரசாங்க மின்சாரத்துறையே பொறுப்பாக ஆயிற்று.

**இந்தியாவில்**
**தமிழகத்திற்கு**
**முதலிடம்**

இன்று தமிழகம் பல்வேறு துறைகளில் அகில இந்தியாவுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. மின்சாரத் துறையிலும் தமிழகத்தின் சாதனை ஈடு இணையற்றதாக விளங்குகிறது. நமது மாநிலத்தில் மின்சாரம் இவ்வாறு பரவலாகக் கிடைத்திட, உறுதியான அஸ்திவாரம் அமைத்தவர் பக்தவத்சலம்.

**நெடுஞ்சாலை**
**அபிவிருத்திக்கு**
**ஒரு இலாகா**

நீண்ட நெடிய சாலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்கின்றன. இதுவரையில் சமுதாயத்தில் வசதிகள் பெற முடியாமல் இருந்த கிராம வாசிகளுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கும்படி செய்கின்றன. வியாபாரமும், சந்தைகளும் பெருக உதவுகின்றன.

காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் நல்ல தார் ரோடுகளை

யும், நீண்ட சாலைகளையும் அமைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. 1946-ல் நெடுஞ்சாலைகளுக்காக ஒரு இலாகா தொடங்கப்பட்டது. சாலை அபிவிருத்தித் திட்டங்கள் பல வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. 1951-ம் ஆண்டு இறுதியில், சென்னை ராஜ்யத்தில் சாலைகளின் மொத்த நீளம் 2,12,526 மைலாக ஆயிற்று.

இன்று தமிழகத்தின் சாலைகள் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. வெளிநாட்டாரும் அவற்றை வியந்து பாராட்டுகிறார்கள். இதற்கான பெருமை, இத்துறையில் ஆரம்ப காலத்தில் ஊக்கத்துடன் தொண்டாற்றிய பக்தவத்சலத்திற்கே உரிமை.

**விவசாய முன்னேற்றத்துக்கு வழி வகுத்தார்**

பக்தவத்சலம் விவசாய அமைச்சராக சுமார் ஒன்பது ஆண்டுகள் பணி புரிந்தார். 1957—ம் ஆண்டு முதல் 1962—ம் ஆண்டு வரையில் உணவு இலாகாவும் அவருடைய பொறுப்பில் இருந்தது. தமிழகத்தின் விவசாய அபிவிருத்திக்கு அவர் திட்டமிட்டுப் பணியாற்றினார்.

பல்வேறு விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நல்ல விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், புதிய விவசாயக் கருவிகள் முதலியவை அதிக உணவு உற்பத்திக்கு வழிகோலின. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பரவலாகத் தமிழகமெங்கும் நிறைவேற்றப்பட்டன.

**எதிர்க்கட்சி உறுப்பினரே பாராட்டினார்**

விவசாய அமைச்சராக இருந்தபோது, பக்தவத்சலம் வெளிநாடு சென்று பல புதிய விவசாய முறைகளை நேரில் கண்டறிந்து வந்து, நம் நாட்டின் நிலைமைக்கேற்ப அவற்றை அறிமுகப்படுத்தினார்.

இந்தியாவிலேயே, அரிசி உற்பத்தியில், ஏக்கர் விளைச்சலில், தமிழகம் முதலிடம் பெற்றது. கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் இந்த உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, சட்டசபையிலேயே பாராட்டினார்.

**கிராமத் தொழில்கள் வளர்ச்சி**

பக்தவத்சலம் தலைமையில் கதர்—கிராமத் தொழில்கள் இலாகா பல சாதனைகளை விளைத்திருக்கிறது. இதன் மூலம் பல இலட்சக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. 1959—ம் ஆண்டில் சென்னை ராஜ்ய கதர்—கிராமத் தொழில்கள் போர்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. பக்தவத்சலம் அந்தச் சட்டத்தின்படி அமைந்த போர்டுக்குத் தலைவரானார்.

வெண்கலத் தொழில், காகித பொம்மை தயாரித்தல், நூல் பின்னும் வேலை, கற்றாழை நார்த் தொழில், பனை ஓலைத் தொழில், பிரம்புத் தொழில், மூங்கில் சாமான்கள் தயாரித்தல், கண்ணாடி வளையல் செய்தல், நூதன தோல் பொருள்கள் தயாரிப்பு, சாயம் போடுதல், கம்பள ஜமக்காளம் செய்தல், சிலை செதுக்குதல், சோப்பு, எண்ணெய், காகிதம் தயாரித்தல் போன்றபல சிறிய கைத்தொழில்கள் அழிந்து போகாமல், விரிந்து வளர, கதர்-கிராமத் தொழில்கள் போர்டு பெரும் உதவி செய்து வருகிறது.

அதன் தலைவர் என்ற வகையில் பக்தவத்சலம் பல்வேறு திட்டங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்திருக்கிறார்.

**மீனவர் நலம் பேணினார்**

மீனவர் நலனுக்காக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கவும், நவீன முறைப்படி அவர்களது தொழிலை நடத்த உதவிடவும், அரசாங்கம் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தியது.

**வன வளம் பெருக்கிய வண்மையாளர்**

காடுகளைப் பாதுகாக்கவும், பயன்படுத்தவும் பக்தவத்சலம் சட்டம் நிறைவேற்றினார்

பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவற்றின் பலனாகப் பயனற்றுக் கிடந்த காடுகளில் பல புதிய பண்ணைகள் தோன்றியுள்ளன.

**கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகள்**

கால் நடை நலம் பேணவும் பக்தவத்சலம் பல்வேறு திட்டங்களை வகுத்தார். சுத்த இன உயர்ரக பொலி காளைகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக கால்நடைப்பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. நவீன முறையில் எவ்வாறு கால்நடைகளை வளர்ப்பது என்பது பற்றிய அறிவைப் பரப்பும் மாதிரிப் பண்ணைகளாக இவை விளங்குகின்றன.

கேந்திரக் கிராமத் திட்டம் ஜில்லாக்கள் தோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாடுகளின் இன விருத்தியில் இது மிகப்பெரிய திட்டமாக விளங்குகிறது. செயற்கை முறையில் கருத்தரிப்பு உண்டாக்கும் நிலையங்களும் செயல்படுகின்றன.

**ஆடுகள் வளர்ச்சியிலும் அக்கரை**

ஆடுகள், கோழி முதலியவற்றின் அபிவிருத்திக்காகப் பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. கால்நடை நோய் தடுப்புப் பணியும் நடைபெறுகிறது.

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சராக பக்தவத்சலம் மிகுந்த அக்கரையுடன் இத்தகைய பல்வேறு திட்டங்களை அறிமுகப் படுத்தினர்.

**காலத்திற்கு ஏற்ற கல்வி முறை**

பழைய திட்டங்களிலிருந்த நன்மைகளையும் காலத்திற்கு ஏற்ற கருத்துக்களையும் இணைத்து, அனேகமாக எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு சிறந்த கல்வி முறையை பக்தவத்சலம் உருவாக்கியிருக்கிறார். அவருடைய முறையில் நிச்சயமற்ற தன்மைகள் விலக்கப்பட்டுள்ளன; குழந்தைகள் நன்கு படித்து அறிவு வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் பிரதானமாக விளங்குகிறது.

அவரது திட்டத்தின் சில சிறப்பான அம்சங்களைப் பார்ப்போம். கல்லூரிக்கு முன்பாக உள்ள கல்வி பயிலும் காலம் பதினோரு ஆண்டுகளாக ஆக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் உள்ளம் இயற்கையாக வளர்ச்சி பெறப் போதிய காலம் வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இதை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

**ஆங்கிலத்திற்கு முக்கிய இடம்**

ஆங்கிலம் தொடக்க வகுப்புகளிலேயே போதிக்கப்படவேண்டும் என்பது பக்தவத்சலத்தின் திட்டம். ஆங்கிலமொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்த எல்லோரும் இந்த முடிவைப் பாராட்டுகிறார்கள்.

கல்வி அமைச்சராக பக்தவத்சலம் பொறுப்பேற்ற பிறகு உயர் தொடக்கப் பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளும், கல்லூரிகளும் பெருகின. மாணவர்களின் எண்ணிக்கை கூடியது.

தலைவர் காமராஜ் அவர்கள் கல்லூரி வரையில் கல்வியை இலவசமாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதனை நிறைவேற்றும் வகையில், முதல் முயற்சியாக அடுத்த கல்வி ஆண்டில் பி. யூ. சி. வகுப்புக் கல்வி இலவசமாக்கப்படும் என்று பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

**தொழிலாளர் நலம் பெருக வழி வகுத்தார்**

தொழிலாளர் நல அமைச்சர் என்ற வகையில், பக்தவத்சலம் தொழிலாளர்களது அனுகூலத்திற்காக ஏராளமான சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். 'தொழிலாளர் விடுமுறைச் சட்டம்' அவற்றுள் குறிப்பிடத் தக்கதாகும். தொழில் தகராறுகளை மத்தியஸ்தம் மூலம் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ளும் நல்ல ஏற்பாட்டினை உருவாக்கி, பல தொழில் தகராறுகள் சமாதானமாகத் தீர அவர் வழி வகுத்தார்.

### மக்கள்
### அமைதியாக
### வாழ்ந்திட

உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய போது பக்தவத்சலம் பாரபட்சம் அற்றவர் என்ற பெயரை வெகு சுலபத்தில் பெற்று விட்டார். 'முதுகுளத்தூர் கலவரம்' என்ற வருந்தத்தக்க சம்பவம் நடந்தபோது, அவர் எத்தகைய சந்தர்ப்பங்களையும் திறம்படச் சமாளிக்கக் கூடியவர் என்பதை நாடு அறிந்தது. கலவரங்களை முளையிலேயே கிள்ளி யெறிந்து, மக்கள் அமைதியாக வாழ வழி வகுப்பவர் அவர். இந்தியாவிலேயே அமைதி யாகவும், கிளர்ச்சிகள் இல்லாமலும் தமிழகம் இருந்து வருவது மிகவும் பெருமைப்படத்தக்க விஷயம். மக்கள் நிர்ப்பயமாக வாழ்கிறார்கள். சட்டவிரோதச் செயல்கள் ஒடுக்கப்பட்டு விடுகின்றன. எல்லா வகைகளிலும் மக்களின் உடைமைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதற்காகவும் பக்தவத்சலம் அனைவராலும் பாராட்டப் படுகிறார்.

### சமயத்துறையில்
### மாபெரும்
### புரட்சி

*1957*-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பக்தவத்சலம் தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றார். *1959*-ம் வருடத்தில் புரட்சிகரமான முறையில் அறநிலையச் சட்டத்தைத் திருத்தியமைத்தார். அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைதியாக ஒரு மாபெரும் புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது.

பல திருத்தலங்கள் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையும், சித்தவைத்திய நிலையங்களையும், தேவாரப்பாடசாலைகளையும், ஏழை அனாதைச் சிறுவர் இல்லங்களையும் நடத்தி வருகின்றன. பல தலங்களில் ஹரிகதா காலட்சேபப் பயிற்சி, நாதசுரப்பயிற்சி, கோயில் குருக்களுக்கு ஆகமப் பயிற்சி, பட்டாச்சாரியார்களுக்குப் பயிற்சி, அறநிலையத்துறையின் நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

### பண்டைய
### கலாசாரத்துக்குப்
### புத்துயிர்

கோயில்கள் சிதைவுற்ற நிலையிலிருந்தால் அறநிலையத்துறை அவற்றுக்கு நிதி உதவி செய்து புனருத்தாரணம் காண வழி வகுக்கிறது. திருச்செந்தூர், கும்பகோணம் கும்பேசுரர் கோயில், ஸ்ரீரங்கம், நாச்சியார்கோயில், பழனி, ஸ்ரீவில்லிப்புத்தூர், திருவெண்காடு, சிக்கல், மதுரை, திருக்குற்றாலம், குன்றத்தூர் சேக்கிழார் கோயில் முதலியன திருப்பணி நடத்தியவற்றுள் முக்கியமானவை.

*1960*–ல் பழனியில், 'பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலாசாரக் கல்லூரி'யை பக்தவத்சலம் துவக்கி வைத்தார். சிற்பம், சித்திரம், விக்கிரக வார்ப்பு, ஆகமம், தத்துவம், சமய அறநூல்கள், வேதம், உபநிடதம், வரலாறு போன்ற பல முக்கிய துறைகளுக்குப் புத்துயிர் அளிக்க அக் கல்லூரி தோன்றியுள்ளது. தமிழ் நாட்டில் இத்தகைய கல்லூரி ஒரு புதிய முயற்சி.

இவ்வாறாக, சமயத்துறையில் பக்தவத்சலம் ஆற்றி வருகின்ற பணிகள் மிகச் சிறந்தவையாக விளங்குகின்றன.

### தொழில்கள்
### தழைக்கத்
### தொழிற்பண்ணைகள்

பக்தவத்சலம் தொழிலமைச்சராக இருந்த போதுதான் 'நெய்வேலித் திட்டம்' உருவம் பெற்றது. தொழிலில் பிற்பட்ட வட்டாரங்கள் முன்னேறவும், தொழில் தெரிந்த சாதாரணமானவர்களும் தொழில் நடத்த வசதியாக இருக்கவும், தொழிற்பண்ணைகளை அரசாங்கமே கட்டித்தரும் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றக் காரணமாக இருந்தவர் பக்தவத்சலம்.

### காமராஜ்
### தலைமையில்
### முன்னேற்றம்

சமுதாய நலத் திட்டத்துறை அமைச்சராகப் பணியாற்றிய பக்தவத்சலம் கிராமப்புற அபிவிருத்திக்காகப் பெரிதும் உழைத்திருக்

கிருர். விடுதலை பெற்ற பிறகு தமிழகம் புதிய உருவம் பெற்று வருகிறது. எல்லா வகையிலும் முன்னேறி வருகிறது.

தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் முன்னேற்றத்தின் வேகம் அதிகமாகி உள்ளது. ஆரவாரம் இல்லாமல் அமைதியாக ஏற்பட்டு வரும் இந்த முன்னேற்றத்தில் பக்தவத்சலத்திற்குக் கணிசமான பங்கு உண்டு.

**ஹரிஜன**
**சேவையும்**
**மதுவிலக்குத்**
**தொண்டும்**

சுதந்தரப் போராட்டக் காலத்திலேயே மதுவிலக்குப் பிரசாரப் பணியிலும், ஹரிஜன சேவையிலும் பக்தவத்சலம் முழுமனத்துடன் ஈடுபட்டார். தமிழக மதுவிலக்குப் பிரசாரக் குழுவின் கன்வீனராகவும், 1933-34-ல் ஏற்பட்ட தமிழ்நாடு ஹரிஜன சேவக சங்கத்தின் துணைத்தலைவராகவும் அவர் தொண்டு செய்தார்.

பக்தவத்சலம் நிர்வாக விவகாரங்களில் ஒரு பழுத்த ஆலமரமாகத் திகழ்கிருர். மக்கள் சேவை தவிர, வேறு எந்தச் சிந்தனையும் அவருக்கு இல்லை. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, என்று கருதி அவர் பணிபுரிந்து வருகிருர்.

**காமராஜ்**
**தலைமையும்**
**பக்தவத்சலம்**
**பணியும்**
**தொடர வேண்டும்**

கைதட்டல்களை எதிர்பார்க்காமல், ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல், மிகவும் அடக்கத்துடன் அவர் சேவை செய்து வருகிருர்.

நன்றியுள்ள தமிழக மக்கள் அவரை என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றுவார்கள்.

தலைவர் காமராஜ் அவர்களது அரிய தலைமையும், பண்பாளர் பக்தவத்சலம் அவர்களது சிறந்த பணிகளும் தொடர்ந்து நாட்டிற்குக் கிடைக்க வேண்டும் என்று அனைவரும் விரும்புகிருர்கள்.


# அபிராமி காட்டன் மில்ஸ் (பி) லிமிடெட்

சூலூர்பேட்டை (போஸ்டு)
நெல்லூர் ஜில்லா :: ஆந்திரப்பிரதேசம்

தமிழகத்தின் எல்லையிலே
ஆந்திரப் பிரதேசத்திலே
தேசத்தின் சேவைக்கு
அர்ப்பணிக்கப்பட்ட
அழகிய நூல் ஆலை

12,000 கதிர்களோடு துவக்கப்பட்ட இந்த ஆலையின் இயந்திரங்கள் அனைத்தும் முற்றிலும் நவீனமானவை

தரத்திற்கும், உறுதிக்கும் தலைசிறந்தவை
எங்கள் 40, 45, 60, 80 நம்பர் நூல்கள்

"தேசப் பணியே தெய்வப்பணி"
"தொழிற்பணியே தூய பணி"

மானேஜிங் டைரக்டர்
**வ. செ. சிவலிங்கம் செட்டியார்**



# எமது சின்னம்

பல்வேறு கட்டிட வேலைகளுக்கு மேலும் மேலும் உதவும் மிக்க அவசியமானதோர் பொருளின் சின்னமாக திகழ்கிறது. சிமெண்ட் விற்பனைக் கான கட்டுப்பாடு நீக்கப்பட்டதிலிருந்து இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனியார் பொது மக்களுக்கு நிர்ணய விலையிலும், சீரான முறை யிலும் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் செய்து வந்துள்ளனர்.

எந்த உயர் நோக்கத்துடன் 1949-ல் 1 லக்ஷம் மெட்ரிக் டன்களிலிருந்து 1966-ல் 10 லக்ஷம் மெட்ரிக் டன்களாக உற்பத்தியை பெருக்க முடிந்ததோ, அதே உயர் நோக்கத்துடன் திறம்பட சிமெண்ட் பங்கீடு செய்து முன்னேற்றத்தைக் குறிக்கும் சின்னமாகவும் விளங்குகிறது.

SANKAR I C BRAND

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் சிமெண்ட் மற்றும் போர்ட்லண்ட் போஸ்ஸோலானா சிமெண்ட் தயாரிப்பாளர்கள்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 'தன் பில்டிங்' 175/1. மவுண்ட் ரோட், சென்னை-2

தொழிற்சாலைகள். சங்கர்நகர் & சங்கரி.

CDS 10 676 TM



முதலமைச்சர் அவர்களுடன் சின்ன அண்ணாமலை

# முதலமைச்சரின் தமிழ்ப் பணி

முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் பணி ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் பரவி இருப்பதைக் காண முடியும். தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்த ஒருவர், அதிலும் வைணவக் குடும்பத்தில் பிறந்து, ஆழ்ந்த தெய்வபக்தியுடன் வளர்கின்ற ஒருவர், தமிழ்மொழியினிடம் அன்பும் ஆர்வமும் கொள்ளாமல், தமிழ்ப் பணி செய்யாமல் இருத்தல் இயலாத காரியம்.

**வைணவக்**
**குடும்பத்தின்**
**தமிழ்ப் பற்று**

இத்தமிழ் நாட்டில் தமிழ்த்தொண்டு செய்கின்றவர்களைக் கணக்கிட்டால் அதன் முதலாவது இடத்தில் வைணவர்கள் இருப்பதைக் காணக்கூடும். எனவே, முதலமைச்சர் அவர்கள் செய்துள்ள தமிழ்ப் பணியும் மிகுதியானது என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

அரசாங்கம் தமிழிலேயே நடைபெறவேண்டும் என்பது குறித்தும், தமிழ் மொழி வளர்ச்சிக்கான முயற்சிகளில் அரசாங்கமும், தமிழறிஞர்களும், பொதுநலத் தொண்டர்களும் எத்துணை தூரம் உழைக்க வேண்டும் என்பது குறித்தும், முதலமைச்சர் என்ன நினைக்கிருர் என்பதை அவர்களுடைய 'கருத்துக் குவியல்' என்ற நூலில் 'புதைபட்ட பொற்குவியல்' என்ற தலைப்பின் கீழ்க் காணலாம்.

**தமிழ்**
**ஆராய்ச்சி**
**பெருக வேண்டும்**

''தமிழ் ஆராய்ச்சித் துறை இன்னும் விரிவான முறையில் நடைபெறுவதற்கான ஆலோசனைகளைத் தமிழறிஞர்கள் எடுத்துக் கூறவேண்டும். அறிஞர்களைத் தமிழாராய்ச்சித் துறையில் ஈடுபடுத்தி முக்கியமான விஷயங்களை நாட்டிற்கு எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்புகளையும் அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறப்பாக, கல்வெட்டாராய்ச்சி, மொழித்துறை ஆராய்ச்சி முதலியவைகளில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்.''

இவ்வாறு கூறும் ஒரு முதலமைச்சர் எத்துணை தூரம் தமிழ்ப்பற்று உடையவராகத் தமிழ்ப் பணியில் ஈடுபட்டவராக இருப்பார் என்று சொல்லத் தேவையில்லை.

**உலகெல்லாம்**
**தமிழோசை**
**கேட்க வேண்டும்**

''தமிழ் இனிமையான மொழி; மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் தனிச் சிறப்போடு விளங்கிய ஓர் உன்னத நாகரிகத்தைத் தன்னுள் பொதிந்து வைத்திருக்கும் மொழி; தமிழ் கண்ட வாழ்க்கை முறைகள் உலகத்தில் பரவவேண்டுமென்றால், அதற்காக உலகமெங்கும் தமிழோசை ஒலிக்கச் செய்வது அவசியமாகும்.'' இச்சொற்கள் முதலமைச்சர் தமிழ் மாட்டு கொண்டுள்ள பேரார்வத்தையும் அன்பையும் எடுத்துக் காட்டுகிறது.

**வாய்ச் சொல்**
**வீரம்**
**பயனில்லை**

பணி செய்கிறவர்கள் இருவகைப்படுவர். ஒரு சாரார் 'பணி செய்ய வேண்டும்' என்று பெருங்கூச்சலிட்டு மக்கள் மனத்தில் ஆர்வத்தை ஓரளவு கிளப்பி விடுவார்களே தவிர, 'தற்போதைய தேவை என்ன; எம்முறையில் அத்தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும்; என்ன செய்தால் வளர்ச்சி ஏற்படும்' என்பதைப்பற்றிச் சிந்திப்பதில்லை.

ஒரு சில காரியங்கள், செய்யப்பட்ட அந்த நேரத்தில் பலன் காணப்பட்டாலும் நாளடை

வில் நின்று நற்பயன் விளைப்பதில்லை. ஆழ்ந்து சிந்தித்து செயலாற்றும் திறமையுடையவர்கள் இவர்களைப் போல் எந்தக் காரியத்தையும் உடனடியாகச் செய்ய முற்படுவதில்லை. முறையாகப் பல திறத்தார்களும் பேசும்கருத்துக்களையெல்லாம் கேட்டு, ஆழ்ந்து சிந்தித்து, உடன்பாடு எதிர்மறை முறைகளால் அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவார்கள். ஆனுல், அவர்கள் செய்யும் பணி நிலைத்து நீண்டநாள் பயன் தரக்கூடியதாக அமையும்.

**வருங்கால**
**சமுதாயம்**
**சிறந்திட**

நிலைத்த தமிழ்ப் பணி என்று சொல்லும்போது ஒன்றைச் சிந்திக்க வேண்டும். எவ்வளவுதான் ஒருவர் தம் வாழ்நாளில் ஒரு பணியைச் செய்தாலும் வருங்கால சமுதாயமும் அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டும். எனவே, தமிழ் நன்கு வளர வேண்டுமானுல் அந்த வருங்கால சமுதாயதைப் பற்றி, அதாவது இக்கால மாணவர்களாக இருப்பவர்களைப்பற்றிச் சிந்திப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**வெறும் உணர்ச்சி**
**மட்டும்**
**போதாது**

அவர்களைப் பற்றிச் சிந்திக்காமல் வெறும் உணர்ச்சிகளில் செய்யப்படும் தமிழ்ப் பணி, அப்போதைக்குப் பலன் தருவதுபோல் தோன்றினுலும் நாளடைவில் பயனின்றிப் போவதோடு அழிந்து விடவும் கூடும். இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு, முதலமைச்சர், இதைப்பற்றி என்ன நினைக்கிருர் என்பதை இதோ அவருடைய 'கருத்துக்குவியல்' என்ற நூலில் இருந்து, சொல்லும் செயலும், என்ற் பகுதியில் காணலாம்.

**கன்னித்**
**தமிழ்**
**வளருகிறது**

''கன்னித் தமிழென்று பெருமையோடு கூறப்படும் செந்தமிழ் எல்லோராலும் கற்கப் பட்டுத்தான் வருகிறது.

''கன்னித் தமிழ் வளரவேண்டும், மேலும் மேலும் அதன் நிலை உயரவேண்டும், என்ற பேச்சு இப்போது எங்கும் பேசப்படுகிறது. கன்னித் தமிழைப் படிக்கத்தான் செய்கிருர்கள். கன்னித் தமிழ் வளர்ந்து கொண்டுதான் வருகிறது. அதன் நிலை மேலும் மேலும் உயர்ந்து கொண்டுதான் செல்கிறது.

**இடையூறு**
**எதுவும்**
**ஏற்படாது**

''கன்னித் தமிழுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்பது துணிபு. ஆனுல், தமிழ்ப் பாடம் சொல்லித் தரும் இக்காலப் போக்குத்தான் எனக்குப் பெரிய அதிர்ச்சியை அளிக்கிறது. பழைய இலக்கியங்கள் இப்போது பாடம் பயிலுவிக்கும் ஆசிரியர்களால் உரிய முறையில் கையாளப்படுவதில்லை. இப்போது புதியவற்றையும், புதிய முறைகளையும் பள்ளித் தமிழாசிரியர்கள் கையாளுகின்றனர். பாடப் புத்தகங்களும் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன என்று என்னுல் சொல்ல முடியாது.''

**பழம் பெருமை**
**மட்டும்**
**போதுமா?**

நம் மொழி ஒருசார் வளர்ச்சி பெருமல் பல துறைகளில் வளர்ச்சி அடைந்து பயனளிக்க வேண்டுமேயானுல், இன்று உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வளர்ந்துள்ள எல்லாத் துறைகள்பற்றியும் தமிழ்மொழி மூலம் அறியும் வாய்ப்பு இருத்தல் வேண்டும். இன்றேல் பழம் பெருமை பேசுவதோடு நின்றுவிடுவோம். புயல் வேகத்தில் நாகரிக வளர்ச்சி உலகத்தையெல்லாம் கவ்விப் பிடிக்கும் நேரத்தில் நாம் மட்டும் பழமை பேசிக் கொண்டிருப்போமேயானுல், உலக சமுதாயத்தில் இடம்பெற முடியாமற் போய்விடும். இக்கருத்து பற்றி முதலமைச்சர் இதோ பேசுகிருர்:

**தமிழ் மொழியை**
**மேலும்**
**வளர்ப்போம்**

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்ற பாரதியின் சொற்படி நாம் நடக்க வேண்டுமெனில் அரிய பெரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டும். இதுவும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு வழிதான். ''கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது

உலகளவு'' என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

''தமிழரின் பெருமையை நாம் இலக்கியங் களின் வாயிலாகக் கண்டறிகிறோம்; கண்டு மகிழ்கிறோமே தவிர அதை வளர்க்கவோ, அது போன்று செய்யவோ நாம் முயல்வது கிடையாது. வாயளவில் பேசிப் பேசி நாம் நம் காலத்தைக் கழிக்கின்றோம்.''

இவற்றையெல்லாம் விட முதன்மையானது, தமிழ்மொழி மூலம் கல்வி போதிக்கும் திட்டமாகும். இத்திட்டம் இப்போது வேகமாக முன்னேறிக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் கூடத் தமிழ் மூலம் கற்பிக்கிறோம் என்ற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது.

**தமிழிலேயே எல்லாம் இயலும்**

1940ஆம் ஆண்டிலேயே மயிலையில் மாணவர் கூட்டத்தில் உலக அரசியல் அமைப்புச் சட்டங்கள் பற்றித் தமிழிலேயே பேசியிருக்கிறார். தலைமை வகித்தவர் கூட, உலக அரசியலமைப்புச் சட்ட திட்டங்களைப்பற்றித் தமிழிலேயே பேச முடியுமா என்று ஆச்சரியப் பட்டாராம்.

இதைப்பற்றி குறிப்பிடுகின்ற முதலமைச்சர் 'தமிழிலேயே ஆகாதது ஒன்றுமில்லை; முக்கியமாக உலகத்து மொழிகளில் மட்டுமல்ல; சிறிய மொழிகளில் எவ்வாறு மற்ற நாடுகள் தங்கள் விவகாரங்களை நடத்திக் கொண்டு இருக்கின்றன என்பதைக் காணக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்போதுதான் எனக்குத் தோன்றிற்று, இந்த மொழிகளில் எல்லாம் அவர்கள் விவகாரங்கள் நடத்தும்போது தமிழ் மொழியிலே ஏன் முடியாது என்றுதான் பட்டது.''

**வளர்ச்சியை வரவேற்கும் பெருந்தகை**

எனவே, தமிழால் ஆகாதது எதுவுமில்லை என்பதையும், அதை வளர்ப்பதற்குச் செய்யப் படும் பல்வேறு தொண்டுகளில் நம் நாட்டு நல்லறிஞர்களும் நூலாசிரியர்களும் பங்கு கொள்ள வேண்டும் என்பதையும், முதலமைச்சர் முழுமனத்தோடு வரவேற்கிறார் என்பதும் நன்கு விளங்கும்.

இத்தகைய கருத்துக்களும் நோக்கங்களும் உடைய முதலமைச்சர் அரசாங்க அளவில் செய்துள்ள தமிழ்ப் பணிகளைப்பற்றி ஒரு சிறிது காணலாம்.

**சங்கப் பணிகளுக்கு உதவி**

செழுந்தமிழ் நூலாகிய பெரிய புராணத்தை இயற்றி இசைகொண்ட அமைச்சர் சேக்கிழாரின் வழியிலே வந்த நம் முதலமைச்சர் தமிழ் வளர்ச்சியையே மூச்சாகக்கொண்டு திகழும் பல்வேறு சங்கங்களுக்குத் தக்கவாறு பொருளுதவி புரிந்துள்ளார். சென்னை நகரில் இயங்கி வருகின்ற தமிழ் வரலாற்றுக் கழகம் கல்வெட்டுக்களைப் படித்து, ஆராய்ந்து, தமிழ் மக்களுடைய சரித்திரத்தை நன்கு விளங்கச் செய்ய ஒருதிட்டத்தைத்தீட்டியுள்ளது. இந்திய அரசாங்கமும் தமிழ்நாட்டு அரசாங்கமும் இத் திட்டத்திற்கு உதவி செய்து வருகின்றன.

**தமிழ் வரலாற்றுக் கழகம்**

அக்கழகம் உதவித் தொகையின் முதல் தவணையைத் தமிழ்நாட்டு அரசாங்கத்திடமிருந்து ஓராண்டிற்கு முன் பெற்றுக்கொண்டது. செல்லும் வகையிலெல்லாம் செம்மையான முறையில் தமிழ்த் தொண்டு ஆற்றி வரும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமும் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுள்ள தென்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

**ஆக்க வேலைகளுக்கு ஆதரவு**

அண்மையிலே நம்முடைய முதலமைச்சரின் ஆட்சிக் காலத்திலே, கல்கத்தா பல்கலைக் கழகமும் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியைப் பெற்று மகிழ்ந்துள்ளது. தமிழ் போற்றும் தமிழ்நாட்டு அரசாங்கம் அப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு ஆதரவு காட்டியுள்ளது. இன்னும் எத்தனையோ நல்ல பல ஆக்க வேலைகளுக்கு அரசாங்கம் அவ்வப்போது நிதியுதவி செய்து வருகின்றது.

**மற்ற மாநிலங்களில் தமிழ்ப்பணி**

தமிழ்நாட்டு அரசாங்கத்திடமிருந்து கணிசமான தொகைகளைப் பெற்றுக்கொண்ட தில்லித் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும், பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. இச்சங்கங்களுக்கு முறையே ஒரு லட்ச ரூபாயும், ஐம்பதாயிரம் ரூபாயும் கட்டட நிதியாக அரசாங்கம் அளித்தது.

**புரட்சியான புதிய திட்டம்**

அரசாங்க இயந்திரத்திலே பல அமைப்புகள் தமிழ்வளர்ச்சிக்கெனஅங்கொன்றும்இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்ததைக் கண்ணுற்ருர் நம் முதலமைச்சர். தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் என்றும் தமிழ் வெளியீட்டுக் கழகம் என்றும், ஆட்சி மொழிக்குழு என்றும் பல அமைப்புகள் இயங்கி வருவதை எண்ணிப் பார்த்தார். இவை யாவும் நன்முறையில் பணியாற்றி வர இவற்றின் வேலைத் திட்டங்களை நன்முறையில் அமைத்துக் கொடுக்க, அத்திட்டங்களைச் செயலாற்றும் வகைகளைக் கண்காணிக்க, ஒரு மத்திய நிறுவனம் தேவையாகும் என்ற எண்ணம் நம் முதலமைச்சரின் அருள் உள்ளத்திலே முகிழ்க்கலாயிற்று.

**வேகமாக நடைபெறும் பணிகள்**

இதன் பயனுகத் தமிழ் வளர்ச்சி நெறியாளர் அலுவலகம் உதயமாயிற்று. அத்துறைக்கென உயர்தர ஐ. ஏ. எஸ். அலுவலர் ஒருவரும் அமர்த்தப்பட்டார். இத்துறை தொடங்ங்கப்பெற்று ஏறக்குறைய ஓராண்டுக் காலமேயாயினும், தமிழ் வளர்ச்சிப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற்று வருகின்றன.

**தமிழ் மொழியில் சட்டம்**

சட்டம் பயின்று சட்டத்திலே நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர் நம் முதலமைச்சர். சட்டக் கருத்துக்கள் எத்தனை அழகாக ஆங்கிலத்தில் அமைந்துள்ளனவோ அதே போன்று அருந்தமிழிலும் அவை அமைய வேண்டும் என்பது நம் முதலமைச்சரின் பேரவாவாகும். எனவே சட்டச் சொற்களை மொழிபெயர்ப்பதும், சட்டங்களை மொழிபெயர்ப்பதும், சட்ட நூல்களை புதிதாகத் தமிழிலேயே ஆக்குவதும் உடனடித் தேவைகளாகும் என்பதை அவர் உணர்ந்தார்.

**நீதிமன்ற மொழியாகத் தமிழ்**

இதன்பயனுக ஆட்சி மொழி பற்றிய சட்ட ஆணைக்குழு (Official Language Legislative Commission) உருவெடுத்தது. இக்குழுவில் சட்ட நிபுணர்களும் தமிழ்ப் பேரறிஞர்களும் இடம் பெற்றுள்ளனர். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி இக்குழுவின் தலைவராய்த் திகழ்கின்ருர். தரணி போற்றும் நம் முதலமைச்சர் நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலே தமிழ்தான் வருங்காலத்தில் அரசோச்சும் எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். நெஞ்சை அள்ளும் இச்செய்தியை நல்கிய நல்லமைச்சர் வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றனர் நந்தம் தமிழ் மக்கள்.

**சிறந்த நூல்களுக்கு உதவி**

சிறந்த நூல்களை இயற்ற வல்ல எத்தனையோ ஆசிரியர்கள் பணமுடையால் மனம் உடைகின்றனர். நூல்களை எழுதி வைத்துக்கொண்டு எங்ஙனம் வெளியிடுவோம் என ஏங்கிக்கொண்டுள்ளனர். இத்தகையோரின் தளர்ச்சியைப் போக்க நம் முதலமைச்சர் முன் வந்தார். இதுவரை வெளிவராத பொருள்களைப் பற்றிய சிறந்த நூல்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தை அவர் அறிவித்தார்.

நிதியுதவி விழையும் ஆசிரியர்களின் கையெழுத்துப் படிகளை ஆராய்ந்து, அரசாங்கத்திற்குப் பரிந்துரை நல்க ஓர் அறிவுரைக் குழுவினையும் (Advisory Commitee) அவர் அமைத்தார். இவ்வாறு நல்ல தரமான நூல்கள் தமிழிலே வெளிவர அடிகோலினுர் நம் முதலமைச்சர்.

### உலகத் தமிழ் மாநாடு

அண்மையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழறிஞர் மாநாட்டைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். உலகத் தமிழறிஞர்கள் ஒன்று கூடிய முதல் மாநாடு அது. இம் மாநாடு உலக நாடுகளின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. இம் மாநாட்டில் கலந்து கொள்ள தமிழகத்திலிருந்து கணிசமான எண்ணிக்கையுள்ள பிரதிநிதிக் குழு மலேசியா சென்றது. எண்ணற்ற அரசாங்க அலுவல்கள் இருந்த போதும் தமிழ் மொழி மீதுள்ள ஆராக்காதல் காரணமாக இக் குழுவிற்கு நம் முதலமைச்சர் அவர்களே தலைமை தாங்கிச் சென்றார்.

### தமிழகத்தில் இரண்டாம் மாநாடு

அம்மாநாட்டில் உரை நிகழ்த்திய நம் முதலமைச்சர் உலகத் தமிழறிஞர் இரண்டாவது மாநாட்டைத் தமிழகத்திலே நடத்த விருப்பம் தெரிவித்து அதற்குரிய அறிவிப்பினையும் நல்கி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். இம் முடிவிற்கேற்ப, 1968-ல் சென்னையிலே இரண்டாவது மாநாட்டை நடத்துவதற்கான வேலைகள் தொடங்கப் பெற்றுள்ளன.

### பணிகள் தொடங்கி விட்டன

இதற்கென ஆற்றல் வாய்ந்த குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் தலைமைப் பொறுப்பையும் நம் முதலமைச்சர் அவர்களே ஏற்றுள்ளார். தமிழ் வளர்ச்சி நெறியாளரும் ஏனைய தமிழறிஞர்களும் உடனிருந்து அரும் பணி ஆற்றி வருகின்றார்கள். இரண்டாது உலகத் தமிழறிஞர் மாநாடு ஈடும் எடுப்புமற்று விளங்கு மென்பதில் ஐயமுண்டோ?

### ஆட்சி பீடத்தில் கன்னித் தமிழ்

ஆட்சி மொழிக் குழுவும் தமிழ் வெளியீட்டுக் கழகமும் தோன்றிய நாள் தொட்டுச் செம்மையான தமிழ்ப் பணி செய்து வருகின்றன. முதலமைச்சரின் ஆட்சிக் காலத்தில் இவ்வமைப்புக்கள் சிறந்த பணிகளை மேன்மேலும் செய்து உயர்வடைந்துள்ளன. ஆட்சி மொழியாகிய அழகு தமிழ் அரசாங்க அலுவலகங்களிலே அரசோச்சத் தொடங்கியுள்ளது. இதுவரை ஏறத்தாழ எண்ணாயிரம் அலுவலகங்களிலே தமிழ்த் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது.

### தமிழ் வெளியீட்டுக் கழகம்

இஃதொன்றே அரசாங்க நடவடிக்கைகளைத் தமிழிலேயே நடத்துவதற்கு அரசாங்கம் கொண்டுள்ள ஆர்வத்திற்குப் போதிய சான்றாகும். தமிழ் வெளியீட்டுக் கழகம் இதுவரை 116 அரிய நூல்களை வெளியிட்டிருக்கின்றது. இக்கழகத்திற்கு முதல் அமைச்சர் அவர்களே தலைவராகத் திகழ்கின்றார். சென்ற ஏப்ரல் 14-ல் தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று, தமிழ் வெளியீட்டுக் கழகம் நாற்பத்தி நான்கு நூல்களை வெளியிட்டது. இவ்விழாவிற்கு நம் முதலமைச்சர் தலைமையேற்று அருளினார்.

### தமிழ்ப் பற்று மிக்க முதலமைச்சர்

வருகின்ற தமிழ்ப் புத்தாண்டிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் மேலும் பல அரிய நூல்களை வெளியிடவிருக்கின்றது. முதலமைச்சரின் ஒப்பற்ற தலைமையிலே தமிழ் வெளியீட்டுக் கழகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்ப் பற்று மிக்குடையவர். தமிழ் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக இருப்பவர். எங்கெங்கு தமிழ் முழக்கம் கேட்கின்றதோ அங்கெல்லாம் நம் முதலமைச்சரைக் காணலாம். எண்ணம், சொல், செயல் இம்மூன்றையும் அவர் வண்ணத் தமிழாகவே மாற்றிக் கொண்டார்.

### தமிழ்த்தாயின் தலைமகன் பக்தவத்சலம்

எத்துறையிலும் தமிழுக்கு முதலிடம் வாங்கித் தர அயராது உழைத்து வருகின்றார். அவருடைய மூச்செல்லாம் தமிழ் மூச்சாகும். சுருங்கச் சொல்லின், நம் முதலமைச்சர் தமிழன்னையின் தலைமகனாவார். வாழ்க நம் முதலமைச்சர். வளர்க அவருடைய தமிழ்த் தொண்டு.

# சமயத் துறையில் புரட்சி கண்டவர்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

தமிழகம் தெய்வ மணங்கமழும் திருநாடு. இறை மணம் கமழும் இன்பத் திருநாடு. விண்ணளந்து காட்டி விண்ணை மறைக்கும் கோயில்கள் நிறைந்த நாடு. தமிழர்களின் வாழ்க்கையில் திருக்கோயில் ஒருமையும்''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது முதுரை. ''திருக்கோயில் இல்லாத ஊர் அடவிக் காடே'' என்பது திருமுறை. தமிழினத்தின் நாகரிகம் பண்டை திருக்கோயிலை இடமாகக்கொண்டு வளர்ந்ததுவே ஆகும்.

தமிழ் மக்கள் திருக்கோயிலைச் சார்ந்து தமது அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் வளர்த்துக் கொண்டார்கள். அதனாலன்றோ தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் அவர்கள் வழிவந்த குறுநில மன்னர்களும் திருக்கோயில்கள் எடுப்பதை இலட்சியமாகக் கொண்டு ஒழுகி எண்ணற்ற திருக்கோயில்களைக் கண்டனர். வாதவூரடிகளை மாணிக்க வாசகராக வளர்த்தது திருக்கோயில் பணிதானே! ஆளுடை அரசர் உழவாரத் திருப்பணியை மேற்கோண்டது திருக்கோயில்களைப் பேணுதலுக்குத்தானே!

சமயச் சார்பான திருப்பணிகளிலும் திருக்கோயில் எடுத்தலும், பேணுதலும் தலையாய பணி. சைவ அடியார்களாக விளங்கிய பலர் திருக்கோயில் எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். குலச்சிறை நாயனர் ஒரு திருக்கோயில் தமது ஊரில் எழுப்பினர். பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் திருநாகேசுரத் திருக்கோயிலைக்கண்டவர். சேக்கிழார் அடிகள் சமய நெறியின் முத்திறவழிபாட்டிலும், அதாவது குரு—லிங்கம்—சங்கமம் ஆகிய வழிபாட்டு நெறிகளில், முறையாக நின்றொழுகிய வராவர்.

## திருக்கோயில்கள் கண்ட பெருந்தகை

சேக்கிழாரின் செவ்விய தமிழகம் உயர்ந்தது. வழி வழி வளர்ந்து வருவது. நமது பாராட்டுதலுக்குரியது. பக்தவத்சலம் அவர்கள் சேக்கிழார் மரபின் வழித்தோன்றல். வழி வழி இயல்பு இவர்களிடத்திலும் விளக்கமுறக் காட்சியளிக்கிறது. பல ஆண்டுகள் தமிழக அறநிலைய ஆட்சித்துறை பொறுப்பினை ஏற்று நடத்தி உள்ளார். அவர் தம் ஆட்சியில் திருக்கோயில்கள் புதுமையும்-திருவருட் பொலிவும் பெற்றன. திருக்கோயிலின் பூஜைகள் இடையீடின்றி நடைபெறும் நிலைமையை எய்தின. பக்தவத்சலம் அவர்கள் நிறை நலம் செறிந்த பக்திமை பூண்டவர். ஆதலால் அவர் தம் சமயப்பணி உள்ளீடு உள்ளதாக அமைந்தது.

பக்தவத்சலம் தமது மனப்பாங்கால் மரபியலைச் சார்ந்து நிற்பவர் என்பதே பலர் அறிந்த செய்தி. ஆயினும் உண்மையான பழமை—மரபு—புரட்சியை—புதுமையைத் தோற்றுவித்து வளர்க்கும் என்பது ஒரு உண்மை. ஆனல் இந்தப் புரட்சி இனிய சூழலில் உருவாகும். அதுபோலவே பக்தவத்சலம் அவர்களும் பழமையினைத்

தழுவிய புரட்சிக்கும் புதுமைக்கும் இட மளிப்பவர்தாம்.

**தமிழ் மொழியில் இறை வழிபாடு**

இறைவனைத் தாய்மொழியால் வழி பாடு செய்ய வேண்டும். தமிழகத் திருக் கோயில்களில் மொழிக்கு மொழி தித்திப் பாக மூவர் சொன்ன தமிழால் அருச்சனை வழிபாடு செய்யும் புதிய மரபைக் கண்ட பெருமை பக்தவத்சலம் அவர்களுக்கு உரியது. திருமுறைகளை அருளிச்செய்த புகழ் மூவர்க்குரியது. திருமுறைகளைக் கால தேவதையின் கொடுமையால் இழந்து விடாமல் காப்பாற்றித்தந்த புகழ் அநபாய சோழனுக்குரியது. "அருச்சனை பாட்டேயாகும்" சேக்கிழார் திருவாக்கை நடைமுறைப்படுத்திய புகழ் பக்தவத் சலத்துக்குரியது. திருமுறைகள் தோன் றிய காலத்தில்–அடியார்கள் வாயிலாக திருமுறைப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த பெருமான்–பின் பக்தவத்சலம் தலைமுறை யில்தான் கேட்டு மகிழுகின்றார்கள். இந் தப்புரட்சி வரலாற்றில் இடம் பெறக் கூடிய புரட்சி.

**திருக்கோயில்களில் சமூகப் பணி**

சமயவாழ்வு பண்பின் முதிர்ச்சி. பண்பாடு நாகரிகத்தின் விளைவு. நாகரிகம் கருத்துக்களின் ஆக்கம். இதுவே உயிரின் படிமுறை வளர்ச்சி. சோழர் காலத்தில் திருக்கோயில்கள் உயிரினத்தின் கருத்து வளர்ச்சிக்குரிய வழிவகைகளில் பணி செய்தன. அதற்குப்பின் பக்தவத்சலம் அவர்களுடைய ஆட்சியில் திருக்கோயில் கள் கருத்து வளர்ச்சிப் பணியினைச் செய் யும் சூழல் உருவாயிற்று. திருக்கோயிலைச் சார்ந்த கல்விக் கூடங்களும் - கல்லூரி களும் தோன்றின. இது ஒரு அரிய புரட்சி. வழி–வழி சிறப்பிற் குரிய புரட்சி.

**சமயத் தலைவர்களை இணைத்த சான்றோர்**

பக்தவத்சலம் அவர்கள் சமயத் துறையில் ஆற்றிய பணிகள் எல்லாவற் றிலும் சிறப்புடையது தமிழகத் திருமடங் களின் தலைவர்களை ஓரணியில் இணைத் தது. தமிழகத் திருமடங்களின் மரபு ஒருவரை ஒருவர் பார்க்காமலிருப் பது; அதன் காரணமாக அவர்களுக் குள் ஒருமையுணர்வு வழிப்பட்ட பணி கள் தோன்றாமல் போயிற்று. பக்த வத்சலம் திருமடங்களின் தலைவர்களை இணைத்த தெய்வீகப் பேரவை கண்டார். அவ்வழி சமய உலகிற்குப் புரட்சியும் புதுமையும் கண்டார். எதிர்காலச் சிறப்பிற்குக் கால்கோள் இட்டார்.

அவர் தம் சமயப் பணி மரபு வழி சிறந்தது; மரபில் கிளைத்து – வளரும் புரட்சித் தன்மை வாய்ந்தது; பழமையும்- புதுமையும் – அம்மையும் அப்பனும் போல – இணைந்து விளங்குவது; தமிழக சமய வரலாறு பக்தவத்சலம் அவர்களின் புகழ் பேசும்; அவர் தம் பணியும் மரபும் வளர்க! வாழ்க!

---

பக்தவத்சலம் குரல்

## காமராஜ்

அரசியல் அறிவு நன்றாக இருக்க வேண்டும். அரசியல் பிரச்னைகளை நன்கு உணர்ந்து கொண்டு தீர்வு காண்பது எப்படி? தலைவர் காமராஜ் அவர்களிடம் அதைப் பார்க்கிறோம். ஆங்கிலத்தில் சொன்னால், காமராஜ் அவர் களிடம் instinct அதாவது இயல்பறிவு— இருக்கிறது.

அரசியல் பிரச்னை என்றால் அவ்வளவு சுலபமாக யாரும் தீர்வு காண முடியாது. புத்தகத்தைப் படித்து—பெரிய நூலாசிரியர் கள் எழுதிய 'பொலிடிகல் சயன்ஸ்' புத்தகத் தைப் படித்து-அவற்றுக்குத் தீர்வு காண்பது இயலாது. அதற்குப் பிரத்தியேகத்திறமை- ஆற்றல்-வேண்டும். எத்தகைய அரசியல் பிரச்னையாக இருந்தாலும் அதை உணர்ந்து கொண்டு அதற்குத் தீர்வு காணக்கூடிய சிறந்த ஆற்றல் தலைவர் காமராஜ் அவர்களி டம் இருக்கிறது.

அவர்களுடைய குணநலன்கள் பற்றியெல் லாம் நீங்கள் உணர்ந்து இருக்கிறீர்கள். இன்றைக்குத் தமிழக ஆட்சியைப் பற்றி பாரதநாடு—பாரதநாடு மட்டுமல்ல நம் நாட் டுக்கு அப்பால் உள்ள வேறு பல நாடுகளும்— போற்றுகின்றன. இதற்காக நாங்கள் அகம் பாவம் கொள்ளவில்லை. ஆனால், ஏன் அத்தகைய பெருமை ஏற்படுகிறது? அதற்குக் காமராஜ் அவர்களது தலைமைதான் காரணம்.

# பாரிவேர் விட்ரியஸ்




நீடித்து உழைக்கும் உயரிய தரம், வனப்புடன் விளங்கும் பளபளப்பு, உபயோகத்துக்கு உகந்த வடிவ அமைப்பு — எந்தச் சூழ்நிலையிலும் சிறந்த சேவை செய்யும் என்ற திடநம்பிக்கையுடன் விஷயம் தெரிந்தவர்கள் பாரி சானிடரி சாதனங்களைத் தேர்ந்தெடுக்க இவையே காரணங்கள்.

பிரிட்டனிலுள்ள டிஸைன் இன்டெக்ஸின் சார்பாக கவுன்ஸில் ஆப் இண்டஸ்ட்ரியல் டிஸைன் ஸ்தாபனத்தினால் ஏற்கப்பட்ட டோல்டனின் அதிநவீனமான அழகிய டிஸைன்களில் பாரி சானிடரி சாதனங்கள் கிடைக்கின்றன.

**D.G.S. & D. யினால் அங்கீகரிக்கப்பட்டவை**

*Parryware* VITREOUS

பிரிட்டனைச் சேர்ந்த டோல்டன் கம்பெனி அளிக்கும் தொழில்நுட்ப ஆலோசனையுடன் தயாரிப்பவர்கள் :

ஈ.ஐ.டி.—பாரி லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது— உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது) சென்னை-1.



முதலமைச்சர் அவர்களுடன் கருப்பையா

# தமிழகத்தின் தவப்புதல்வர்

வி. ஆர். ராதாகிருஷ்ணன்

முப்பத்தி மூன்று வருடங்களுக்கு முன் ஒரு நாள் நான் உயர் நிலைப்பள்ளி மாணவனுக இருந்த சமயம், மயிலாப்பூரில் நானும் என்னைப் போன்ற மற்ற சிறுவர்களும் சென்னை மாநகராட்சி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரின் சார்பாக 'வோட்' சேகரிப்பதற்காக தெருத் தெருவாகச்சென்றோம்.சன்னதித்தெருவில் ஒரு வீட்டினுள் நுழைந்தோம். பெரியவர் ஒருவர் சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அவரது கையில் விசிறி ஒன்றிருந்தது.

### காங்கிரசுக்கு வாக்களியுங்கள்

அவரை அணுகி, காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டளிக்குமாறு கேட்டேன். பெரியவர் என்னை 'அந்த காங்கிரஸ் அபேட்சகரை உனக்குத்தெரியுமா' என்றுகேட்டார். நாங்கள் எவருமே அவரைப் பார்த்ததில்லை. நாங்கள் அறிந்திருந்த தெல்லாம், காங்கிரஸ் ஒரு தேசிய ஸ்தாபனம்–விடுதலை ப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒரு இயக்கம் - என்பது தான். காங்கிரஸ் அபேட்சகர் எங்களுக்கு அறிமுகமானவர் அல்ல காங்கிரசின் கொள்கையைத்தான் நாங்கள் அறிந்திருந்தோம்.

### இவர்தான் பக்தவத்சலம்

பெரியவர் மீண்டும் எங்களை நாங்கள் யாருக்காக வோட்டு கேட்டோமோ அவரை எதிர்க்கும் மற்ற ஒரு அபேட்சகரும் காங்கிரஸ்காரர்தானே, ஏன் அவருக்கு வாக்கு அளிக்கக்கூடாது, என்று கேட்டார். ''மற்றவரும் காங்கிரஸ் காரராக விருக்கலாம். ஆனுல் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி காங்கிரசின் அதிகார பூர்வமான அபேட்சகரை எதிர்ப்பவர் யாராயினும் அவரை ஆதரிக்கக்கூடாது'' என்று நான் அவரிடம் கூறினேன்.

பெரியவர் உள்ளே இருந்தவரைக் கூப்பிட்டார். ''நீங்கள் யாருக்காக ஆதரவு கோரி வந்தீர்களோ அந்த காங்கிரஸ் அபேட்சகர் பக்தவத்சலம் இவர்தான்'' என்று எங்களுக்கு அறிமுகப் படுத்தினுர்.

### நெருங்கிய தொடர்பு

அன்றுதான் திரு. பக்தவத்சலத்தை முதன் முறையாகச் சந்தித்தேன். அப்பெரியவர்தான் காங்கிரஸ் தலைவர் திரு. முத்துரங்க முதலியார் என்றும் தெரிந்து கொண்டேன். அன்றிலிருந்து திரு. பக்தவத்சலம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

முதலமைச்சர் சற்று கூச்ச சுபாவமுள்ளவர்; எனினும் உறுதியான கோட்பாடுகளை உடையவர். அமைதியான பேச்சும், நிலையான கொள்கைகளும் மாருத போக்கும் உடையவர்; இரக்கமும் அன்பும் மிக்கவர்; எனினும் உணர்ச்சிகளுக்கு அவர் இடமளிக்க மாட்டார். எனவே தனது உணர்ச்சிகளை வெளிப்படையாக காட்டுவதில்லை. ஆனுல், எந்த ஒரு சிறந்த பணிக்கும் அவருடைய உதவி நிச்சயமாகவும் தாராளமாகவும் கிடைக்கும்.

### அப்பட்டமான பொய்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

யின்போது "பக்தவத்சலம்தான் ஹிந்தியைப் புகுத்துவதற்கு காரணம்" என்று கூறி, மாணவர்களை அவருக்கு எதிராகத் தூண்டி விட்டனர். மாணவர்களை அவர் சந்திக்க மறுத்து விட்டார், என்று கதை கட்டி விட்டனர். முதலமைச்சருக்கு விரோதமாக ஒரு வெறித்தனத்தைத் தூண்டிவிட்டனர் என்று சொன்னால் மிகையில்லை.

### மாணவரிடத்தில் பரிவு

இயற்கையிலேயே முதலமைச்சருக்கு மாணவர்களிடத்தில் பரிவு உண்டு. மாணவர்களின் தவறான இயக்கத்தை வெறுத்தாலும் அவர்களை எவ்விதத்திலும் அடிக்கக் கூடாது என்றே கூறி வந்தார். மாணவர்களின் கிளர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு சமூகத் தீய சக்திகள் பெரும் பலாத்காரத்தில் இறங்கியபோதுதான், அவ்வன்முறைகளை ஒடுக்குவதற்குப் போலீஸாரை நடவடிக்கையில் இறங்குமாறு கட்டளையிட்டார்.

அந்த நெருக்கடி மிக்க நேரத்தில் அவர் கொஞ்சமும் சஞ்சலமடையவில்லை; உறுதியாக நின்றார். தீயசக்திகளை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டித் தமிழகத்தின் மானத்தைக் காத்தார்.

### வாய்த்திறமும் மிக்கவர்

அவரது பேச்சில் வேகமிராது. ஆனால் பொருள் செறிந்திருக்கும்.

ஒருசமயம் சட்டசபையில் ஒரு எதிர்க்கட்சி அங்கத்தினர் 'எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையெல்லாம் கைது செய்து விட்டீர்களே?' என்று கேட்டார். முதலமைச்சர் அதற்கு நிதானமாக பதில் சொன்னார். "நகரத்திலுள்ள பழைய பெரும் குற்றவாளிகளைத்தான் நாங்கள் கைது செய்திருக்கிறோம்; அவர்கள் கனம் அங்கத்தினரின் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?"

### 1937-ல் சுதந்தரமா?

மற்றொருநாள் எதிர்க்கட்சியைச் சேர்ந்த புலவர் ஒருவர் "1937-ல் சுதந்தரம் பெற்றோம்' என்று அவரது பேச்சில் பலதடவை குறிப்பிட்டார்.

முதலமைச்சர் பதிலளிக்கையில், "1937-ல் சுதந்தரம் பெற்றதாக புலவர் கூறினார்; நான் 'இல்லை' என்று மறுத்து 47-ல் தான் சுதந்தரம் பெற்றோம் என்று கூறினால் அதை அவர் எப்படி ஒப்புக் கொள்வார்? அவர் ஒரு புலவரல்லவா? புலவர் தப்பு சொல்லுவாரா?" என்று கூறி சபையையே சிரிப்பில் ஆழ்த்தி விட்டார்.

### ஜெயப்பிரகாஷ் பாராட்டு

ஒரு சமயம் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் காரில் பிரயாணம் செய்தேன்.

"தமிழகத்தில் ரோடுகள் மிகவும் நன்றாக யிருக்கின்றன! பொதுத்துறை அமைச்சர் யார்?" என்று கேட்டார். அப்போது பொதுத்துறை அமைச்சராக பக்தவத்சலம் இருந்த காலத்தில்தான் தமிழ் நாட்டில் ரோடுகள் சிறப்பாக போடப்பட்டன. பல பாலங்கள் கட்டப்பட்டன.

### அனைத்தும் செய்தவர்

இந்திய சரித்திரத்தில் ஒரு சிறந்த அரசன் என்ன செய்தான் என்று பள்ளிக்கூடத்தில் கேள்வி கேட்டால் பொதுவாகச் சில நன்மைகளைச் செய்தார்கள் என்று பள்ளிக்கூட மாணவர்கள் சொல்லி விடலாம். கோயில்களைக் கட்டினார், சாலைகள் போட்டார், கல்விச்சாலைகள் அமைத்தார், ஏரிகுளங்களை வெட்டினார், சிறந்த பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்தார், என்று சொல்லி விடலாம்.

பக்தவத்சலம் அவர்களின் நிர்வாகத்தைப்பற்றியும் சந்தேகத்திற்கு இடமின்றி இதே மாதிரி சொல்லலாம்.

### எல்லாத் துறைகளிலும்

புதிய காடுகளை வளர்ப்பதிலிருந்து பழைய திருக்கோயில்களைப் புதுப்பித்துச் செப்பனிட்டுத் திருப்பணிகள் செய்வது வரையில் அவரது ஆட்சியில் நடைபெற்று வருகின்றன. புராதனக்கலைகளைப் புனருத்தாரணம் செய்வதிலிருந்து விஞ்ஞான வளர்ச்சிக்கான ஆராய்ச்சி வரை

யில் நடைபெறுவதற்கு அவர் வழி வகுத்திருக்கிறார்.

கிராமக் கைத்தொழில் வளர்ச்சியோடு கூடவே சிறு தொழில்களும் கனரகத் தொழில்களும் அணுமின் தொழில் கூட ஏற்படுவதற்குத் திட்டங்கள் அவரது ஆட்சியில் வகுக்கப்பட்டுள்ளன. தமிழகம் பாரதத்தின் முன்னோடி ராஜ்யமாக விளங்குவதற்குக் காரணம் திரு. காமராஜ், பக்தவத்சலம் இவர்களிடையே உள்ள நட்பும் நல்லுறவுமே என்று உறுதியாகச் சொல்லலாம். மற்ற ராஜ்யங்களில் தலைமையில் ஏற்பட்டுள்ள பூசல்களினால் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது.

**காமராஜும்**
**பக்தவத்சலமும்**
**நாட்டின்**
**இரு கண்கள்**

ஆனால் தமிழ் நாட்டின் பேரதிருஷ்டம் என்றே சொல்ல வேண்டும்—திரு. பக்தவத்சலமும், திரு. காமராஜும் இரு கண்கள் போல-இரு கரங்கள் போல-கண்ணனும் அர்ச்சுனனும்போல-ராமனும் இலக்குவனும் போல—பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்து பணியாற்றுவதேயாகும்.

---





டீசல் இரயில் வண்டி (மீடர் கேஜ்)

இந்திய இரயில்வேயின் உற்பத்திப் பிரிவாக 10 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இணைப்புப் பெட்டி தொழிற்சாலை, தற்போது ஆண்டுக்கு பல்வேறு ரகங்களில் எல்லாவித வசதிகளுடன் கூடிய 600-க்கு அதிகமான இரயில் பெட்டிகளை தயாரித்து வருகிறது. உயரிய சர்வதேச தரங்களுக்கு ஏற்ப எலக்ட்ரிகல் மல்டிபிள் யூனிட்டுகள், டீசல் இரயில் பெட்டிகள், ஏர்கண்டிஷண்ட் இரயில் பெட்டிகள் ஆகியவை மிக சிறந்தவகையில் தயாரிக்கப்படுகின்றன.

INTEGRAL COACH FACTORY
FOR BETTER TRAVEL

**இன்டெக்ரல் கோச் பாக்டரி**
(இந்தியன் இரயில்வே) சென்னை-38, இந்தியா

# பக்தவத்சலம் தாலாட்டு

கவிஞர் அரு. சோமசுந்தரன்

(15-10-66 அன்று மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற, பக்தவத்சலம் 70வது பிறந்த தின விழாக் கவியரங்கிற்குத் தலைமைதாங்கிப் பாடியது.)

ஆன்ற தொழிலமைச்ச! அன்புடைய உள்ளமைச்ச!
சான்ற உணவமைச்ச! சால்பழகு சுந்தரரே!
அரங்கம் ஏறியுள்ள அருந்தமிழின் பாவலரே!
சுரங்கம் தேடிவந்த சுவையறியும் தமிழ்மக்காள்!
உங்கள் அனைவர்க்கும் உயரன்பால் நன்றிசொலி
சங்கத் தமிழ் தருவேன் தாழ்ந்து!

நல்ல தமிழுக்கு நானென்று முன்வந்து
வல்ல பணியாற்றி வளர்கின்ற தமிழ் மதுரை!
சொல்லும் பொருளழகும் சுவை மிக்க அணியழகும்
வெல்லும் யாப்பழகும் விளையாடும் கவிமதுரை!

ஆலைத் தொழில் வளர அதன்வழியில் நாடுயரச்
சோலை நிழலாகித் தொண்டாற்றும் தொழில் மதுரை!
போக்கு வரத்துக்குப் புகழ்மிக்க வசதியெலாம்
தேக்கி வைத்துள்ள தேனன தென்மதுரை!

அன்னை மீனாட்சி அருள் பொழியும் பார்வையினால்
என்னை ஆட்கொண்ட எழிலான திருமதுரை!
குன்றில் அமர்ந்திருக்கும் குமரனது காட்சியினால்
மன்றில் அமர்ந்திருப்போர் மகிழ்ந்திருக்கும் மாமதுரை!

வைகை எனும் தாயின் வருகையினால் வயலெல்லாம்
பொய்கை என விளங்கிப் பொலிவிக்கும் நீர்மதுரை!
நாட்டின் பகை எதிர்த்து நாளெல்லாம் விடுதலைக்குப்
போட்டி போட்டதனால் புகழ்மிக்க போர்மதுரை!

அந்தமதுரை நகர் அன்புக்குப் பாத்திரமாய்ச்
சொந்தம் கொண்டாடும் சோர்வில்லாப் பெரியோரே!
அறுபதாண்டு விழா அந்நாளில் கொண்டாடி
ஒருபதாண்டு விழாக் கொண்டாடும் ஓர்மகனே!

**பக்தவத்சலமே!** பால்மணத்துப் பாலகனே!
பக்தர் நெஞ்சிலெலாம் கொலுவிருக்கும் கோமகனே!
கண்ணே! கற்கண்டே! கலைவளர்க்கும் பேருருவே!
தன்னேர் இல்லாத தமிழ்நாட்டின் மாமணியே!

தங்கம் நீஎமக்கு! தலைநிமிரும் பகைவர்க்கோ
சிங்கம் நீஅவர்க்கு, சிரிக்காத பாலகனே!
தாலே! தாலேலோ!! தமிழ்நாட்டில் நீஒருவன்
ஆளே! ஆளேதான்!! ஐயாவே!கண்ணுறங்கு!

உறக்கம் வரவில்லை; உண்பதற்கும் ஒய்வில்லை!
மறக்க முடியாமல் நாடெல்லாம் சுற்றுகிறாய்!
குழந்தாய்! தமிழ்நாட்டைக் கோபுரமாய் ஆக்கியதால்
வளர்ந்தாய்! என்றுலகோர் பாராட்டும் வாஞ்சையனே

மனித னாய்ப் பிறந்து மந்திரியாய் ஆவார்கள்;
மந்திரி யாய்ப் பிறந்த மாமகனே! தாலேலோ!
வயது முதிர்ந்தாலும் வளர்பணியில் இளைஞன்நீ!
பயமே அறியாத பண்புடைய தலைவன்நீ!

மன்னன் மாறிடலாம்; மணிமுடிதான் மாறாது
கன்னல் மாறிடலாம்; கழனியதோ மாறாது
எண்ணம் மாறிடலாம்; இதயம்தான் மாறாது
பண்கள் மாறிடலாம்; பவள இதழ் மாறாது

அமைச்சரவை மாறிடலாம்; ஆண்மகனே நீமாறாய்!
இமைப் பொழுதில் பகைவரையும் எழுந்திருக்க வைத்திடுவாய்!
மூத்த தமிழ்த்தலைவர் மூதறிஞர் **இராஜாஜி**
ஏத்த வாழ்ந்துவரும் ஏற்றமிகு நிர்வாகி!

விருதுநகர் பிறந்து இமயத்தை வெற்றி கொண்டு
பொருது பகையழித்துப் புற்றீசல் தமை ஒழித்து
வான வீதியிலே வளர்நில வாய்ப் பவனிவரும்
ஆன பெருந்தலைவன் யாவர்க்கும் மிக எளியன்

ஏழை பங்காளன் ஏற்றமிகு **காமராசர்**
வாழைக் கன்றாகி வளர்கின்ற தளபதியே!
காந்திக்கு நேருவைப் போல் காமராஜர் - நீயானாய்!
சாந்தி தவழ் நின்முகத்தில் சஞ்சலங்கள் கண்டதில்லை!

எந்தச் சிக்கலையும் எளிதாகத் தீர்த்திடுவாய்
சொந்தம் கொண்டாடத் தமிழ்மக்கள் முக்கோடி!
சின்ன உருவத்தில் சிந்தனையோ மிக அதிகம்!
கன்னம் கரு விழியில் கண்டிப்பும் மிக அதிகம்!

168612

வார்த்தை மிகக் குறைவு; வாய்திறந்து சிரித்தறியேன்
கூர்த்த மதியுடையாய்! கொஞ்சம் நீ சிரித்திடுக!
என்று மொழிந்திடவே எங்களுக்குத் துணிவில்லை.
கன்றின் புன்னகையைக் கவிதைத் தாய் கேட்கின்ருள்

தேச பக்தியுடன் தெய்வ பக்தி கொண்டவனே!
நாசம் வராமல் நாடனைத்தும் காப்பவனே!
மொழிகள் மோதாமல் முத்தமிழைக் காப்பதற்கு
வழிகள் காட்டுகின்ற வளர் அறிவுப் பெட்டகமே!

பாட மொழியாகப் பைந்தமிழை ஆக்கிவைத்து
நாடர் மனமகிழ நல்லுரிமை தந்தவனே!
வறிய குழந்தை களும் வளர்கல்வி பெற்றிடவே
அரிய கல்வியினை இலவசமாய் அமைத்தவனே!

உடையும் புத்தகமும் உடையாத சிலேட்டுகளும்
தடையே இல்லாமல் ஏழைகட்குத் தந்தவனே!
பெண்கள் கல்விக்குப் பெரும்பணிகள் செய்ததினுல்
கண்கள் என்றின்று காரிகையர் புகழ்பவனே!

சமயப் புகழ் வளரச் சரித்திரத்தை மாற்றியதால்
இமயப் புகழடைந்த ஈடில்லாச் சேக்கிழாரே!
தேசம் நெருக்கடியால் தீயாகித் திணறுகையில்
பாசம் தனைமறந்து படைதொடுக்க வல்லவனே!

உணவு நெருக்கடியால் உடலங்கள் ஓய்கையிலே
கணமும் ஓயாமல் காரியங்கள் செய்தவனே!
தலைக்கு மேலாகத் தண்ணீர்தான் போகையிலே
தலையைக் கழற்றுபவர் தாரணியில் ஏராளம்!

மேகம் சூழுகையில் மின்னலுக்குத் தான்பயந்து
சோகம் உருவாகி ஓடுபவர் ஏராளம்!
கத்தி எடுத்தாலும் கம்புபிற எடுத்தாலும்
புத்தி கொடுத்தென்றும் போதனைகள் ஊட்டுகிருய்!

அருமை அறியாமல் ஆர்ப்பரிக்கும் வேளையிலே
பொறுமை இழக்காமல் புவனத்தை ஆளுகிருய்!
பொறுப்பைக் கழிக்காமல் பொறுப்புடனே ஆளுவதால்
வெறுப்பை வளர்ப்போர்க்கும் விதியாகி விளங்குகிருய்!

கோடிக் கரையழியக் கோடானு கோடியழ
வாடி வதங்குகையில் வாஞ்சையுடன் ஆதரித்தாய்!
நெற்றிக் கண்திறந்து நீணிலத்தில் பகைவர் செயும்
குற்றம் தனைக்கூறும் குணமிக்க நக்கீர!

நல்ல பணிசெய்தாய்! நமதருமை மாகாணம்
ஒல்லும் வகையெல்லாம் உனது வழி செல்வ தென
இறுதி முடிவெடுத்து எத்தனையோ நாளாச்சு!
உறுதி மாருது! உரைக் கின்றேன் வருங் காலம்!

உன்றன் கைகளிலே ஒப்படைத்த தமிழகத்தை
நன்றே வளர்ப்பாய்! நாயகனே கண்ணுறங்கு!
நமது பரதகண்டம் நம்காம ராசர்கையில்!
நமது தமிழ்நாடு நம்முதல்வர் திருக்கையில்!

என்று முடிவெடுத்த எந்தமிழ்த்தாய் சாதனையை
நின்று புகழ்கின்ருர் நீணிலத்து மக்களெலாம்!
எழுப தாண்டுவிழா ஏற்றமுடன் கொண்டாடி
வழுவா திருக்கின்ற வளர்தலைவ! நூற்ருண்டு

விழாவும் கொண்டாடி வெற்றிபல சூடிடுக!
தளரா திருந்தென்றும் தலைமைவழி காட்டுக!
என்று மீனுட்சி இறையருளைப் போற்றியிவண்
நன்றே வாழ்த்து கிறேன் நயந்து!


நமது தமிழக முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின்

சிறந்த சேவைக்கு

எங்கள் மனமார்ந்த பாராட்டுதல்கள்

சிவானந்தா மில்ஸ் லிமிடெட்

கணபதி போஸ்ட்

கோயமுத்தூர் - 6.

# 5 IMPORTANT REASONS WHY YOU SHOULD PROCESS YOUR COLOR FILMS AT GEMINI LAB.

If you are producing a color film, consider the important advantages offered exclusively by GEMINI:



1 GEMINI processes films to a high degree of perfection

2 GEMINI processes applying most scientific methods

3 GEMINI processing costs less for the quality that is given

4 GEMINI is quick in delivering all processed materials

5 GEMINI gives zealous care to each job, no matter how large or how small

**GEMINI**
COLOR LAB.
THE BEST IN THE EAST

*For further details, contact:*

GEMINI STUDIOS LABORATORY, MOVIELAND, POST BOX No. 709, MADRAS-6

# நியாயம் வழங்கத் தவருதவர்

ஏ. கே. சந்திரசேகரன்

சிக்கனப் பேர்வழி. எதையும் சிக்கனமாகச் செலவழிப்பதில் மகா சூரர். பேச்சில் கூட அரசியல் விஷயங்களை மிகச் சிக்கனமாகப் பேசி விளங்க வைக்கும் சுபாவம் உள்ளவர். ஒருமுறை காலை அவரைச் சந்திக்கச்சென்றேன் நான். பல் துலக்கி வந்து அவருடைய ஆசனத்தில் அமர்ந்தார்.

### சிக்கனம் மிக்கவர்

சமையல்காரர் ஒரு கப் கொண்டு வந்து கொடுத்தார். அது காப்பி என்று நான் எண்ணினேன். அது ஜலமாக இருந்தது. 'காப்பி என்று அல்லவா நினைத்தேன். ஜலம் அல்லவா கொண்டு வந்திருக்கிருய்'என்ருர். 'யாரோ கேட்டார்கள், அதற்காக கொண்டு வந்தேன்' என்ருர் சமையல்காரர். கொடுங்கள், என்று திருப்பிக் கேட்டார் சமையல்காரர். அவர் கொடுக்கவில்லை. சாப்பிட்டுவிட்டு அனுப்பிவிட்டார். காலையில் காப்பிக்குப் பதிலாக வெறும் ஜலம் சாப்பிட்டார், என்ருல் அவருடைய சிக்கனத்தைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

### செக்கில் கையெழுத்து

இன்னெரு முறை ஒருவருக்கு செக் கொடுத்தார். அந்த செக் வேலை உயர்வுக்காக எழுதப்பட்டிருந்தது. அதைக் கிழித்து விடாமல் அதையே பல இடங்களில் திருத்தி தன்னுடைய கையெழுத்தை அந்தந்த இடங்களில் போட்டுக் கொடுத்தார்.

முன்பெல்லாம் செக்குக்கு ஸ்டாம்பு உண்டு. இப்பொழுது கிடையாது. அந்தக் காலத்தில் அதைக் கிழித்துப்போட யோசனை செய்வது உண்டு. இப்பொழுது அந்த யோசனை செய்ய வேண்டியதே இல்லை. கிழித்துப் போட்டுவிட்டு வேறு ஒரு செக் எழுதிக் கொடுத்து விடலாம்.

### படிப்பில் சிரத்தை

ஆனுல் அவர் அப்படிச் செய்யவில்லை. அந்த செக்கையே அடித்துத் திருத்தி பல இடங்களில் கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டார். எப்பொழுதும் எழுதுவதிலும் படிப்பதிலும் மிகவும் சிரத்தை உள்ளவர். சிறு வயதில் அவர் படிக்கும்போது கூட சதா ஏதாவது எழுதிக்கொண்டே இருப்பார். சதா படித்துக் கொண்டும் இருப்பார்.

தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் போது கூட புஸ்தகம் கையுமாக இருப்பார். பெரியவர்கள் யாராவது வந்து விட்டால் நாங்கள் எல்லாம் படிப்பது போல் பாவனை செய்வோம். அவர் மாத்திரம் அதிலெல்லாம் ஈடுபட மாட்டார்.

### மாமன்மார் ஆதரவு

அவருடைய சிறு வயதிலேயே அவருடைய தகப்பனுர் இறந்து விட்டார். தாய் மாமன்தான் மிக அருமையாக – செல்வமாக–வளர்த்தார். அவருடைய தகப்பனுர் ஊர் மீஞ்சூர். பெயர் கனகசபை. அவரை பேட்டைக்கு நெருப்பு மிதி விழாவுக்கு அழைத்து வந்தார்கள். வந்த இடத்தில் ஜுரம் கண்டு இறந்து விட்டார்,

அது முதல் தகப்பன் இல்லாத குழந்தை என்று மாமன்மார்களும் பெரிய தாயாரும் சிறிய தாயாரும் மிக அருமை யாக வளர்த்தார்கள். மாமன் வைதீகக் குடும்பத்தைச்சேர்ந்தவர். இவர் படித்தது புரசைவாக்கம் ஐரோடிலுள்ள லூதர்ன் மிஷன் ஸ்கூல். இப்பொழுது அதன் பெயர் மாறிவிட்டது.

**செல்லப் பிள்ளை**

பள்ளிக்கூடம் போகும்போது அவரும் அவருடைய சிறிய தாய் மகள் ராஜம்மாள் அம்மையாரும் செல்வார்கள். இவர்களை அழைத்துச் செல்ல ஆள் உண்டு. பள் ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும் உடைகளை எல்லாம் கழற்றிவிட்டு மாற்று உடை உடுத்திக் கொள்வார்கள். கௌபீ னம் முதற்கொண்டு யாவற்றையும் மாற்றிவிட வேண்டும்.

பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும் கழற்றிய உடைகளை மடித்து ஒழுங்காக வைத்து விடுவார்கள். அதை யாரும் தொட மாட்டார்கள். தீட்டு என்று ஒதுக்கி விடுவார்கள். தோய்த்த துணியைக் கட்டிக் கொண்டால் கூட வீட்டிலுள்ள தாய்மார் கள் யாரும் தொடமாட்டார்கள். தீட்டு என்று ஒதுக்கி விடுவார்கள்.

**எண்ணெய் ஸ்நானம்**

பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும் அந்தத் துணிகளைக் களைந்துவிட்டு மாற்று உடை அணிந்து கொண்டாலும் ஆசார மாக துணிகளைக் கட்டிக் கொண்டிருந் தாலும் கூட பிள்ளைகளைத் தொடமாட்டார் கள். இதேமாதிரிதான் அவருடைய அம் மான்மார்களும். அம்மான்மார்கள் இரு வரும் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் படித்து வந்தார்கள்.

சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கையில் வெந் நீரில் நல்ல தண்ணீர் விட்டு குளிக்க மாட் டார்கள். அந்த வெந்நீர் தன்னாலேயே ஆறிவிட்ட பின்னர்தான் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். எண்ணெய் தேய்ப்பதற்கு ஒரு ஆள் உண்டு. எண்ணெய் தேய்த்துக் குளித்ததும் சாப்பாடு.

**காப்பி கிடையாது**

வீட்டிலே காப்பி ஒன்றும் கிடையாது, காலையில் 9 மணிக்கு எல்லாம் சமையல் ஆகிவிடும். சாப்பிட்டு விடுவார்கள். அவ ருக்கு அடிக்கடி ஜலதோஷம் வருவது உண்டு. ஜலதோஷம் இருந்தால் பகலிலே சமையல்காரர் மோர் விடமாட்டார். மோருக்காக ஒதுக்கி வைத்த சாதத்தில் ரசத்தை விட்டுவிடுவார். பெரியவர்களிடம் ஒன்றும் சொல்ல முடியாது! ரசஞ் சாதம் சாப்பிட்டுவிட்டு வந்துவிட வேண்டியது தான்.

மத்தியானம் ஏதாவது சாப்பாடு, மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த தும் ஏதாவது-பொரி விளங்காய் போன்ற சிற்றுண்டி கொடுப்பார்கள். அப் பொழுதுகூட காப்பி கிடையாது. வீட்டில் காப்பி வைப்பதென்றால் யாருக்காவது ஜுரம், தலைவலி, ஏதாவது வியாதி இருந் தால்தான் கொடுப்பார்கள்.

**கட்டுப்பாடு இல்லை**

அவர் பி. ஏ. படிப்பு முடியும் வரை யில் தவறாது தேறி வந்தார். மந்திரியான பிறகு சாதாரணமாக யாரும் அவரைப் பார்க்கலாம். எந்த விதமான கட்டுப் பாடும் கிடையாது. சர்க்கார் உத்தியோ கஸ்தர் யாராவது பார்க்கும் பொழுதுதான் உள்ளே வேறு ஆட்களை விடமாட்டார் கள். பொதுஜனங்கள் யாராவது வந்தால் இரண்டுபேர் மூன்று பேர் உள்ளே வந்து உட்கார்ந்து கொள்ளலாம். யாரும் எதை யும் சொல்ல முடியாது.

**எப்படி பேசுவது?**

உள்ளே வந்தவர்கள் உட்கார்ந்து இருப்பார்கள். எதற்காக வந்தார்கள் என்று கேட்க மாட்டார். அவர் மட்டும் தன்னுடைய காரியத்தைப் பார்த் துக்கொண்டு இருப்பார். வந்தவர்கள் தங்களுடைய ரகசியத்தை வெளியிலே சொல்ல முடியாதபடி மற்றவர்கள் எப் போது போவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

ஒருவர் மற்றொருவர் எப்பொழுது போவார் என்று எதிர்பார்த்துக் கொண்டி

ருப்பார். மந்திரி மட்டும் தன்னுடைய வேலையைக் கவனித்துக் கொண்டு இருப்பார். அவர்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசச் சொல்வார்.

**பேச்சும் பணியும்**

அவர் தம்முடைய வேலையைக்கவனித்துக்கொண்டு இருப்பார். மேலும் கேட்டால் ''நீங்கள் சொல்லுங்கள் என்காதில் விழுகின்றது. நான் வேலையைப் பார்த்தால் உங்களுக்கு என்ன கஷ்டம்? நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்'' என்று சொல்லுவார். வந்தவர்கள் ஒன்றும் சொல்ல முடியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு போய் விடுவார்கள்.

**உடனடியாகக் கவனிப்பார்**

எந்த விஷயத்தையும் நாளைக்கு என்று சொல்லி ஒதுக்கிவைக்க மாட்டார். அன்றைய விஷயம் அன்றே முடிந்துவிட வேண்டும். சில மந்திரிகள் ஏராளமான பைல்களைச் சேர்த்துக்கொண்டு எல்லோருக்கும் காண்பித்துக கொண்டு இருப்பார்கள். ஆனால் இவர் உடனுக்குடன் பதில் எழுதி விடுவார். இவரிடம் எந்த பைலும் இருக்காது.

**அன்புள்ளம் கொண்டவர்**

யாரையும் மேலுக்கு உபசார வார்த்தைகள் பேசி வரவேற்பது இல்லை. அதனால் ஒருவர் மீதும் அன்பு இல்லை என்று சொல்ல முடியாது. அன்பை வெளிக்குக் காட்ட மாட்டாரே ஒழிய மனம் நிறைய அன்பு உண்டு.

யாருக்காவது ஏதாவது செய்யவேண்டுமென்றால் நியாயம் இருந்தால் செய்யத் தவறுவதில்லை. அநியாயம் என்று பட்டால் செய்ய முடியாது என்று சொல்ல மாட்டார். அவர்களாகவே பார்த்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும்—ஏதாவது சாக்குப் போக்கு சொல்லிவிடுவார்.

தெய்வ பக்தியும், தேச பக்தியும் ஒருங்கே பெற்று ஓய்விலாது உழைக்கும் உத்தமர் பக்தவத்சலம் நீடுழி நலமுடன் வாழப் பிரார்த்திக்கிறேன்.


தமிழக முதலமைச்சர்

**திரு. எம். பக்தவத்சலம்**

அவர்களுக்கு

எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்

---

**மணலி. ராமகிருஷ்ண முதலியார்**

*98/99, வரதாமுத்தியப்பன் தெரு,*

சென்னை-1.

எந்த விழாவிற்கும்
சந்தர்ப்பத்திற்கும்

எல்லோரும் சால விரும்புவது

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
துணிகள்



தமிழ் நாடு
கைத்தறி
நெசவாளர்
கூட்டுறவு
சங்கம்
லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், சென்னை-8

ELEGANT

# வாழையடி வாழையாக வந்ததொரு மரபு

அகிலன்

சின்னஞ்சிறு உருவம், சிந்தனை சூழ்ந்த முகம், சிக்கனமான பேச்சு, கூச்சம் கனிந்த பார்வை, அடக்கம் நிறைந்த சுபாவம், பிறர் மனம் நோகக் கூடாதென்ற பெருந்தன்மை, அதற்காகத்தமது கடமைகளையும் விட்டு விடாத பிடிவாதம், பல அலுவல்களையும் ஒரே சமயத்தில் கவனிக்கும் ஆற்றல், உழைப்பு,உழைப்பு, உழைப்பு! -இவற்றின் கூட்டுறவே நான் கண்ட திரு. பக்தவத்சலம் அவர்கள்.

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் ஏதோ பேச்சுக்கிடையில் ஒரு அதிகாரி நண்பர் கூறினர்: "அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு, அதைக் கொள்கைக்கேற்ப இயங்கச் செய்யும் திறமை இருக்கிறதே, அது அலாதியானது. அந்தக்கலையில் கைதேர்ந்தவர்கள் திரு. பக்தவத்சலம் அவர்கள். அவர்கள் எந்த ஊரில் எந்த வேலையாக இருந்தாலும் அவர்களுடைய நிர்வாகத்திலுள்ள இயந்திரம் சுழலும்படி பார்த்துக் கொள்வார்கள். அவர்கள் பொறுப்போடு உழைப்பதால் மற்றவர்களும் உழைக்கும் அவசியம் ஏற்பட்டு விடுகிறது."

மனிதனுக்கு இருதயம் இயங்கினல்தான் அவனுக்குப் பெயர் மனிதன். அதேபோல் ஆட்சியின் இயக்கமும் ஒழுங்காக நடை பெற்றால்தான் சமுதாய வாழ்க்கை சிக்கல்கள் இல்லாமல் உயிர்ப்பு நிறைந்திருக்கும். தனிமனிதனின் பாதுகாப்பு, வளர்ச்சி, மகிழ்ச்சி எல்லாவற்றுக்கும் பொறுப்புள்ளது ஆட்சிநிர்வாகமே.சேவை மனப்பான்மையிலிருந்தோ, சுறு சுறுப்பிலிருந்தோ அது தவறுமானல், மக்களுடைய வாழ்க்கையின் தொல்லைகள் மிகுந்து விடும்.

அலைகள் மிகுந்த கடலில் தனது மரக்கலத்தைக் குறிப்பிட்ட கரையை நோக்கி இயக்கும் கப்பல் தலைவனின் பணியை விடச் சிக்கலும் பொறுப்பும் நிறைந்தது அது. அந்தக் காட்சியை நேரில் காணும் வாய்ப்பு எனக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. அப்போது அவர்கள் கல்வி- நிதி அமைச்சர். தமிழ்நாடு அரசாங்கம் நடத்திய பாரதி விழாவுக்கு அவர்கள் தலைவர். நான் செயலாளன். கடமையை முன்னிட்டு அடிக்கடி அவர்களைச் சந்திக்கும்படியாக இருந்தது.

பல்வேறு சிக்கல்களைச் சுமந்துகொண்டு அவர்களைக் காண வந்திருப்பார்கள் பலர். சிலர் வந்தவுடன் நேரடியாக விஷயத்தைக் கூறுவார்கள். அமைச்சரின் செவிகள் அதைக் கேட்கும். வாய் சில சொற்களில் பதிலைக்கூறும். கண்களோ எதிரில் உள்ள காகிதக் கட்டுகளில் ஆழ்ந்திருக்கும். கை அதன்மேல் கருத்தெழுதத் தொடங்கிவிடும் – பைல்கள் தாமதமாகாமல் எந்த வேலைகளுக்கிடையிலும் சுழன்று கொண்டிருக்கும், மனிதரின் இரத்த ஓட்டம் நரம்புகளில் ஓடுவது போல!

நேரத்தின் அருமையை உணராதவர்கள் சிலர் உண்டு. வந்த விஷயத்தைச் சொல்லுவதிலும் தயக்கம்; சொல்லிவிட்டு விஷயம் முடிந்தவுடன் எழுந்து போவதிலும் தயக்கம். "சரி நீங்கள் போகலாம்!" என்று அமைச்சர் கூறி நான் காணவில்லை.

தலையைக் குனிந்தவண்ணம் 'பைல்'களில் மூழ்கி விடுவார்.

பாரதி விழாவை நாங்கள் தொடங்கியவுடன் சீனுக்காரனும் படையெடுப்பைத் தொடங்கிவிட்டான். மிருகத்தனமாக முன்னேறிப் பீதியைக் கிளப்பிக் கொண்டிருந்தான். அதற்காக விழாவைக்கைவிடுவதாகவும் இல்லை. "கவிஞரைச் சீனுக்காரனுக்கு எதிராகத் திருப்பி மக்களுக்கு எழுச்சியூட்டுவோம்!" என்ருர் தலைவர்.

இரவு பகல் என்று இல்லாமல் நிர்வாகம் சுழன்றவேளை அது. முதல் அமைச்சராக இருந்த காமராஜ் அவர்களோடும் மற்ற அமைச்சர்களோடும் அவசர ஆலோசனைகள், அதிகாரிகளுடன் அவசரத் தொடர்புகள், நெருக்கடி நிலைகளுக்கேற்ற முன்னேற்பாட்டுத் திட்டங்கள், இவ்வளவுக்கிடையிலும் சமயங்களில் இரவு பதினெரு மணிக்கு விழாத் திட்டங்களையும் கேட்டு ஆலோசனைகள் கூறவும் மறப்பதில்லை.

என்னுடைய கண்கள் எப்போதுமே எழுத்தாளனின் கண்கள். அந்தக் கண்களுக்குச் சந்திக்கும் மனிதர்கள் எல்லோருமே கதாபாத்திரங்கள். நான் வியப்படைந்தேன். "எப்படி இந்த வயதில் இவ்வளவு ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைக்க முடிகிறது? அறுபது வயதுக்கு மேலும் இந்தத் துடிப்பு மிகுந்திருப்பதன் ரகசியம் என்ன?"

ரகசியம் எனக்கு விளங்கத் தொடங்கியது. இந்த நூற்ருண்டின் முற்பகுதி விளைவித்த பல இலட்சியவாதிகளை எந்த மண் உருவாக்கியதோ அதில் உருவானவர் இவர். திரு. முத்துரங்க முதலியாரின் வாழையடி வாழையாய்ப் போராட்டத்தை மேற்கொண்டவர்.

ஆம்; அன்றைய அரசியல் வாழ்வில் குதித்தவர்கள் சிறைச்சாலைகளை எதிர்பார்த்திருக்க முடியுமே தவிர, கனவிலும் அமைச்சர் பதவியை எதிர்பார்த்திருக்க முடியாது.

போராடத்துணிந்தவர்களுக்கு, எலும்புக் கூடாக வெள்ளையர்கள் விட்டுச் சென்ற நாட்டை ஆள்வது என்பது சவாலாகி விட்டது. அன்றைய நிர்வாக இயந்திரத்துக்குப் பெயர் அதி+காரம் + வர்க்கம் என்பது. மக்களின் தேவைகளைப் புறக்கணிப்பது, தாமதப்படுத்துவது, வசதி உள்ளோர்களுக்கே மேலும் வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த முறையில் பழகிப் போன இயந்திரம் அது.

முதன் முதலில் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு இது ஒரு பெரிய சவாலாகவே இருந்திருக்க வேண்டும். அவர்களுடைய சட்டப் படிப்பு அவர்களுக்குத் தொழில் துறையில் உதவாவிட்டாலும் இந்தத் துறைக்குப் பெரும் துணை செய்திருக்கிறது. பழைய இயந்திரத்துடன் அன்புடன் பழகியே, அதை அறிந்து கொண்டு அதைப் புதுப் பாதைக்குத் திருப்புவதில் மற்றவர்களுடன் ஒத்துழைத்திருக்கிருர்கள்.

அவர்களுடைய நெடுங்கால அனுபவமும் அதற்குத் திரு. காமராஜ் அவர்களது பாராட்டுமே அவர்களை இன்று முதல்அமைச்சர்ஆகச் செய்திருக்கின்றன. அவருடைய வெற்றி உழைப்பின் வெற்றி; அதைப் பாராட்டும் பண்பின் வெற்றி.

தமது பொறுப்பைப் பற்றி ஆழ்ந்து தெரிந்து கொள்ளும் ஆர்வமும், அதற்கான உழைப்பும், வரக்கூடிய சவால்களை ஏற்றுக்கொண்டு சிந்திக்கும் தன்மையும், சுறுசுறுப்போடு செயல் புரியும் தகுதியுமே அவருடைய இளமையின் ரகசியங்கள் என்று நான் அனுமானிக்கிறேன். கூட்டுறவாக உழைக்கும் கலையில் உற்சாக மூட்டக்கூடியவர்கள் என்பது நான் பெற்ற சிறு அனுபவம்.

இளமை என்பது வயதில் இல்லை. அது மனத்தில் இருக்கிறது. சிந்தனையில் இருக்கிறது. ஒரு தெளிவான குறிக்கோளை முன் வைத்துக்கொண்டு அதை நோக்கிச் செல்பவர்களிடம் முதுமை நெருங்குவதற்கு அஞ்சுகிறது. தேனீயின் சுறுசுறுப்போடு தமது அறுபத்தெட்டாம் வயதிலும் ஆர்வத்தோடு உழைக்கிருர்.

கார்விபத்தில் கைஎலும்பு பிளவுபட்ட காலத்தில் அதற்காகப் பலர் வருந்திஞலும், ஒரு வகையில் அது கட்டாய ஒய்வு என்று அவர்களை அறிந்தவர்கள் கருதிஞர்கள்—ஒரு நாள் நான் ஆஸ்பத்திரியில் காணச் சென்றபோது, ஆஸ்பத்திரியையே தமது அமைச்சரக அலுவல் கூடமாக மாற்றியிருந்தார் இந்த இளைஞர்!

போன் நெ : 2433, 2933, 4623 ஸ்தாபிதம் : 1938 தந்தி : "ஸொஸைட்டி"

## சிறந்த கைத்தறி ஜவுளிகளுக்கு
## சேலம் அம்மாப்பேட்டை ஸொஸைட்டி ஜவுளிகளே!

புதுப்புது டிசைன் சேலைகள், சோளி பீஸ் ரகங்கள், வேஷ்டிகள், குண்டஞ்சு, பாவாஞ்சு, ஜரிகை அங்கவஸ்திரங்கள், ஜரிகை வேஷ்டிகள், நவீன ரக பெட்ஷீட்கள்.

**மற்றும் உங்களுக்குத் தேவையான கைத்தறி ஜவுளிகள் எல்லாவிதமான டிசைன்களிலும், எல்லா கெஜங்களிலும் கிடைக்கும்.**

சென்னை தியாகராயநகர் விற்பனை டெப்போ :
**9, உஸ்மான் ரோடு, டி. நகர், சென்னை-17.**
போன் நெ : 41723

1. சேலம் டெப்போ, 69–பி, முதல் அக்ரஹாரம், சேலம்-1.
2. செவ்வாய்ப்பேட்டை டெப்போ, 85-பி, கண்ணுரத் தெருவு, சேலம்-2.
3. ஆத்தூர் டெப்போ, 268, கடைவீதி, ஆத்தூர்.
4. அரூர் டெப்போ, 151, கடைவீதி, அரூர்.
5. ஈரோடு டெப்போ, 292, அக்ரஹார வீதி, ஈரோடு.
6. திருச்சி டெப்போ, 35-பி, சின்னக் கடைவீதி, திருச்சி.
7. திருநெல்வேலி டெப்போ, 103–87, மேலரத வீதி, திருநெல்வேலி.
8. திருப்பத்தூர் டெப்போ, 22, ஜின்னு ரோடு, திருப்பத்தூர்.
9. நெய்வேலி டவுன்ஷிப் டெப்போ, சென்ட்ரல் பஜார், பிளாக் நெ. 19, யூனிட் நெ. 6/4, நெய்வேலி-3.
10. ஸ்கூட்டர் (எம். எஸ். டபிள்யூ. 5602)
11. தலைமை அலுவலக சில்லரை விற்பனை டெப்போ, அம்மாப்பேட்டை, சேலம்-3.

மொத்த விற்பனை டெப்போ :
**55, 2–வது அக்ரஹாரம், சேலம்-1.**
போன் நெ. 4621

வெள்ளிவிழா விற்பனை டெப்போ,
**திரு. வி. க. பாதை, அம்மாப்பேட்டை, சேலம்-3.**

எங்கள் சொஸைட்டி ஜவுளிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் ஹேண்ட்லூம் ஹவுஸ்களிலும் மற்றும் விற்பனை டெப்போக்களிலும் எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

ஏ. மாரியப்பன்
தலைவர்

## அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை ஸொஸைட்டி லிட்.

எண். 532, அம்மாப்பேட்டை, சேலம்–3.
**(தமிழ்நாடு.)**

*WITH THE BEST COMPLIMENTS OF*

**SATHYANARAYANA BROTHERS.**

ENGINEERS & CONTRACTORS,

"Mandhara"

No. 25, Edward Elliots Road,

MYLAPORE :: MADRAS-4.

Telegrams : SATHBROS Telephones : 83768, 83769 & 83760

May God Bless Him Long And Health To Serve
Our Country For Years To Come

CH. SATHYANARAYANA

With the best Compliments of

RAMARJUNA CONSTRUCTIONS,

ENGINEERS & CONTRACTORS,

No. 25, Edward Elliots Road, Mylapore,

**MADRAS–4.**

May God Bless Him Long Life And Health To
Serve Our Country For Years To Come

*S. P. ARJUNA RAJA,* B.E.

# Associated Transports (Madras) Private Limited

No. 28/29, BHUDAPERUMAL MUDALI STREET,

MOUNT ROAD,

MADRAS-2.

**The Premier Transport House In Madras City Catering The Needs of Travelling Public in General and Those For Tourist in Particular.**

பாரதத்தின் விடுதலைக்குப் போராடினார்
விடுதலை பெற்ற பாரதத்தின் முன்னேற்றத்திற்காக
சோர்விலாது உழைக்கிறார்
பாரதத்தின் பழைய பண்புகளைப் பாதுகாத்து
புதிய சமுதாயத்தை நிறுவும் திருப்பணியில்
தமிழகத்தின் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றுகிறார்

நமது அருமை முதலமைச்சர்

**திரு. எம். பக்தவத்சலம்**

அவரது சேவைகளை நாம் மறவோம் — நாடும் மறவாது!


ஈசன் என்ஜினீயரிங் கம்பெனி லிமிடெட்
ஈசுவரன் அண்டு சன்ஸ் என்ஜினீயர்ஸ் (பி) லிமிடெட்
ஹாக்பிரிட்ஜ், ஹெவிட்டிக் அண்டு ஈசன் லிமிடெட்
சென்னை-1.

# ஒளிமயமான எதிர்காலம் எங்களுக்கு !

**ஆர். சித்ரா**
*(பி. ஏ. மூன்றும் ஆண்டு)*
*சென்னை ஸ்டெல்லா மேரிக்கல்லூரி*

'கல்வியில் சிறந்த நாடாகப் பல நூற்ருண்டுகளாகப் புகழ் மணம் பரப்பி வந்த இந்தியா அந்நியரது படையெடுப்பினுல் மணமின்றி குணம் குன்றி அடிமையாக வலிவிழந்து நிற்க வேண்டி வந்தது. "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?" என்று விடுதலையை நாடி ஏங்கி நின்ற மக்களது விழிநீர் துடைத்து அடிமைத்தளைகளை அறுத்தெறிந்து சுதந்திரம் பெறச்செய்தது காங்கிரஸ் கட்சி.

அம்மகத்தானமுதல்சாதனை "பாமரராய் விலங்குகளாய் ஊமையராய் செவிடர்களாய் குருடர்களாய்" உறங்கிக்கிடந்தோரை விழித்தெழச் செய்தது. எல்லோருக்கும்சமஉரிமையளித்ததோடன்றிஎளிய மக்களின் ஆட்சியையும் மலர்வித்தது.

சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் செய்த சாதனைகள் "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னுற்றுங் கொல்லோ உலகு" எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப அமைந்துள்ளன. கைம்மாறு எதிர்பாராமல் மக்களுக்கு உதவிய காங்கிரசின் சாதனைகளில் கல்வி வளர்ச்சியைப்பற்றி ஒரு மாணவி என்கிற முறையில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு சமுதாயத்தின் அஸ்திவாரமாய் விளங்குவது கல்வி ஒன்றே. ஒரு அரசின் சிறப்பு அந்நாட்டின் கல்வித் தரத்தைப் பொறுத்ததே. அதனுல்தான் வள்ளுவனுர் கல்வி அதிகாரத்தை அரசியலில் வைத்தார் போலும்.

ஆங்கிலேயரின் ஆதிக்கம் நம்மை அடிமைப்படுத்திய போதிலும் கல்வி முறையில் அவர்களது உதவியை எண்ணி நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். சுதந்திரம் பெற்ற பிறகு நம் நாடு இன்னின்ன விதத்தில் முன்னேறும் என்பதை அன்றே தமது தீர்க்க தரிசனத்தால் கண்ட பாரதியார் "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், நல்ல ஆலைகள் வைப்போம், நல்ல கல்விச் சாலைகள் வைப்போம்..................பல வண்மைகள் செய்வோம்............சாத்திரம் கற்போம் ...............உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்று பாடினுர். 1947ல் கல்விஅறிவு பெற்ருேரது தொகை மிகவும் சொற்பமாக இருந்தது. சமுதாயத்தில் சலுகையும் வசதிகளும் செல்வமும் பெற்ற ஒரு சிலருக்கு மட்டுமே கல்வி என்று இருந்தது. ஆனுல் இன்ருே மக்கள் அனைவர்க்கும் கல்விச் செல்வம் வேண்டுமளவு கிடைக்கும்படி காங்கிரஸ் அரசு செய்துள்ளது. இன்று கிராமங்கள் தோறும் பள்ளிகளை ஏற்படுத்தியதோடு அல்லாமல் கல்வி அறிவு இல்லாதவரே இல்லை எனும்படி செய்த பெருமை காங்கிரசையே சாரும்.

ஒரு காலத்தில் "தீண்டத்தகாதவர்" என்று சமுதாயம் ஒதுக்கி வைத்த ஹரிஜனங்களை அந்தத்தாழ்வு மனப்பான்மை வீழும்படியாகச் செய்து சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக வாழும்நிலையும் அவர்களுக்கு பல விசேஷ கல்விச் சலுகைகளையும் காங்கிரசின் ஆட்சியில் கண்டோம்.

காங்கிரசின் மகத்தான சாதனைகளில் பெண் கல்வி, முதியோர் கல்வி, கட்டாயக் கல்வி, இலவச கல்வி குறிப்பிடத்தக்கவை. கிராமத்தில் கைநாட்டன்றி வேறு அறியாது, கல்வியறிவின்மையால் ஏமாற்று,

வஞ்சகம், சூழ்ச்சி இவற்றிற்கு பலியாகிக் கொண்டிருந்த ஏழைகள் முதியோர்கல்வித் திட்டத்தில் தினசரித்தாள்கள் மூலம் அன்றாட நடவடிக்கைகளை அறியும் அளவிற்கு உயர்வடைந்திருக்கிறார்கள்.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப் பெதற்கு?' என்று கேலி செய்தோர் அதிசயிக்கும் வண்ணம் பெண்கள் ஹோம் சயன்ஸ் கல்லூரிகளில் மாணவிகள் வருங்கால இந்தியாவை உருவாக்கும் அன்னையாகவும், இல்லத் தலைவியாகவும் கலை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் ஆகிய எல்லாத் துறைகளிலும் அறிவு பெற்று உயர்ந்ததோடு அன்றி, அலுவலகங்களில் பெரும் பொறுப்புள்ள நிர்வாகிகளாகவும், ஏன் நாட்டின் பிரதம மந்திரியாகவுமே, முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்றால் அந்தப் பெருமை காங்கிரசையே சாரும்.

கல்வியின் உதவியால் நாட்டின் தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, சுகாதார அபிவிருத்தி எல்லாவற்றிலும் பெருத்த அளவில் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். அவ்வாறு கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தைதோற்றுவித்தபெருமை நமது முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்களையே சாரும். அவரது கல்வித் திட்டத்தில் பரந்த மனப்பான்மையுடன் மக்கள் தாய் மொழியோடு தேசிய தொழியையும், அன்னிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளும்படியாக ஆங்கிலத்தையும் மற்றும் பல மொழிகளையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

மக்களது கல்வி முன்னேற்றத்திலும், வாழக்கைத்தரத்தை முன்னேற்றமடையச் செய்வதிலும் மிகுந்த அக்கரையுடன் சுயநலமின்றி உழைத்துவரும் திரு பக்தவத்சலம்அவர்கள் காலத்திற்கு ஏற்றபடி கருத்துக்களைகளையும் பழைய திட்டங்களிலிருந்த நன்மைகளையும் இணைத்து கல்வி முறையில் ஒரு புரட்சியையே செய்துள்ளார்.

குழந்தைகளது அக வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை அறிந்து அதற்கேற்றவாறுசிறந்தகல்விமுறையைஅமைத்துள்ளார். தலைவர் காமராஜ் அவர்களும், திரு பக்தவத்சலம் அவர்களும் கல்லூரி வரையில் கல்வியை இலவசமாக்க வேண்டும் என்று ஒரு மூச்சுடன் முனைந்திருக்கிறார்கள். அவர்கள் கனவு நனவாகும் நாளை அண்மையிலேயே காண்போம்.

விஞ்ஞானம், கலை, பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில்தான் கல்வி வளர்ச்சியுற்றது-என்று நாம் கருதி வந்தோம். ஆனால் பண்டைய கலாசாரம், சமயத்துறை ஆகியவற்றிற்கும் புத்துயிரூட்டி வளமாக்க முடியும் என்பதை நமது முதலமைச்சர் நமக்குக் காட்டியுள்ளார்.

அதற்குச் சான்றாக 1960ல் பழனியில் 'பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலாசாரக் கல்லூரியைத் துவக்கிவைத்து சிற்பம், சித்திரம், விக்கிரக வார்ப்பு, ஆகமம், தத்துவம், சமய அற நூல்கள், வேதம், உபநிடதம், வரலாறு போன்ற பல துறைகளையும் பலரும் கற்கும்படி வாய்ப்பளித்துள்ளார். தமிழ் நாட்டில் இத்தகைய ஒரு கல்லூரி புது முயற்சி ஆகும்.

மற்ற எல்லாத்துறைகளைப் போல கல்வித் துறையிலும் முதலமைச்சரின் பணி மிகச்சிறப்பாக விளங்குகிது என்பதை மாணவியாகிய நான் கண்கூடாகக் காண்கிறேன்.

வாழ்க காங்கிரஸ்! வளர்க கல்வி!

---

**பக்தவத்சலம் குரல்**

## பண்பாடு

பாரதநாடு எந்த அளவுக்கு விரிந்ததோ அந்த அளவுக்கு நம்முடைய பண்பாடும் விரிந்து பரந்துள்ளது. ஆழங்காண முடியாத அளவுக்கு அதன் தொன்மை இருக்கிறது.

பிரம்மத்தைப் பற்றிச் சொல்லும்போது, பிரம்மம் எல்லாவற்றிலும் இருக்கிறது, அதனால் இதில்தான் பிரம்மம் இருக்கிறது என்று சொல்லமுடியாது என்பார்கள். பாரதப் பண்பாடும் அப்படிப்பட்டதுதான். அதன் கூறுகள் பல; வடிவங்கள் பல. இதனால்தான் பாரதப் பண்பாடு என்று ஒரு சாத்திரத்திற்குள் அடக்கிக் கூற முடிவது இல்லை.

பாரத நாட்டைத் தங்கள் தாய்நாடாக வரித்து அதன் சுக துக்கங்களுக்காக-நாகரிக வளர்ச்சிக்காக-பாடுபட்ட சகல இன-மொழி மக்களின் ஏகோபித்த மன வளர்ச்சியே பாரதப் பண்பாடாகப் பிரவாகித்தது. இத்தகைய கூட்டு முயற்சி தொடர்ந்து இயங்கி வருவதால்தான் பாரதப் பண்பாட்டில் இன்றும் உயிர்த் துடிப்பைக் காண முடிகிறது.

With best Compliments

from

**ALS Productions**
MADRAS-14.

**Sarada Studios**
MADRAS-26.

## THE MADRAS COOPERATIVE CENTRAL LAND MORTGAGE BANK LIMITED

Grams :
" CENMOR BANK "
Phone : *71061*

Post Box No : 609,
Luz, Mylapore,
Madras-4.

| | |
|---|---|
| Authorised Capital | Rs. 2,50,00,000·00 |
| Paid up Capital | Rs. 1,23,18,600·00 |
| Reserves | Rs. 62,65,172·00 |

The Bank is the Apex Cooperative Bank for advancing long term agricultural credit and issues debentures for 15 and 17 years on the security of first mortgages transferred to it by Primary Land Mortgage Banks and its other assets.

During the year 1964–65 the Bank has sanctioned a special scheme of Rs. 10·80 crores for reclaiming 1·80 lakhs acres of lands in Parambikulam—Aliyar Project area. Increasing attention is being paid for such schemes and for lending for purposes of land improvements generally.

N. S. RAMALINGAM, B.A., M.L.A.,
President.

With the best compliments
from

# M. Jayaraman

ENGINEEERING CONTRACTOR
23/B/9, Nungambakkam High Road,
MADRAS-34.

*With the best Compliments*
*from*

# P. Palaniswamy B.E.

ENGINEER & CONTRACTOR
No. 5, New Giri Road,
MADRAS-17.
Phone : 87870

## CUMULATIVE TIME DEPOSIT SCHEME

It is ideal for the people who are in receipt of fixed incomes by way of salary or wages. It provides them a facility to save for a purpose e.g., education of children, giving them a start in life, marriage of a daughter, building a house or retiring in comfort etc. The common man living on a fixed income cannot suddenly raise a tidy capital required for the big events in life. For instance, a son who has taken a doctor's degree and wishes to open a dispensary needs an initial capital investment. A boy gets technically qualified and may wish to start a small industry of his own. There are also social obligations like marriages. One can anticipate these events and provide for them 10 or 15 years in advance by wise investments in the Cumulative Time Deposit accounts.

2. Monthly deposits are very much within your reach. The investments are a low, the returns high. A deposit of Rs. 10/- every month will fetch you Rs. 665/- in a 5 year accounts Rs. 1,500/- in a 10 year account and Rs. 2,600/- in a 15 year account as against your deposit of Rs. 600/-, 1,200/- and 1,800/- respectively. Rebate of income tax is allowed on your investments in 10 and 15 year Cumulative Time Deposit. Open a C.T.D. account today for security aud comfort in old age.

## POST OFFICE SAVINGS BANK

The Post Office Savings Bank *(P. O. S. B.)* is the Government savings bank. Money can be deposited whenever they have it and withdrawn whenever they need it. It accepts very small deposits–one can open an account even with Rs. 2/- and make subsequent deposits of Re. 1/- each. However, the balance at the credit of the account should not be below Rs. 5, once it has crossed that limit. The bank helps people with low incomes and even school children to learn the habit of thrift and provides the medium for doing so.

2. The deposit enjoys complete security while earning tax free annual return of 4 percent on balances upto Rs. 25,000 on individual accounts and Rs. 50,000 on joint accounts. Withdrawals by cheques are allowed at any Head of Departmental sub-savings bank authorised in this behalf.

For details enquire at any Post Office or

# Directorate of Small Savings, Madras-9.

Phone No. : 22871/21292 Grams : "SAVINGS"

# கோல்டன் பிரிக்ஸ் & டைல்ஸ் கம்பெனி

நெற்குன்றம், பூந்தமல்லி ஹைரோடு,

சென்னை-49.

போன்: *61646*

★

தரமான செங்கற்கள்; உறுதியான மங்களூர் ஓடுகள்; அற்புதமான மொஸைக் கற்கள் முதலியவற்றைத் தயாரிப்பதில் புகழ் பெற்றவர்கள்.

★

மானேஜிங் பார்ட்னர்:

என். சீனிவாச முதலியார், என். முனுசாமி முதலியார்

எஸ். ஜார்ஜ் ரத்தினம் நாடார் என். கோபால் முதலியார்



*With Compliments*

*from*

## Carborundum Universal Limited

Manufacturers of Coated and Bonded Abrasives

Super Refractories and Abrasive Grains

MADRAS - BOMBAY - CALCUTTA - NEW DELHI

உணவுற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நாட்டு நலனுக்கு முதுகெலும்பு போன்றவர்கள்

கிராமவாசிகளுக்கு உபரி வருமானமளிக்கும் தொழில்

# கதர்த் தொழில்

கதர் கிராமத் தொழில்களுக்கு அளிக்கும் ஆதரவு நமது விவசாயிகளுக்கு உபரி வருமானம் தர உதவுகிறது. கதரையே உடுப்பதும் கிராமத் தொழில் பொருள்களையே அன்றாடம் உபயோகிப்பதும் நாட்டு நலனுக்கு உதவும் பெரும் பணியாகும்.

157 கதர் விற்பனை நிலையங்கள் உங்களுக்குப் பணியாற்றத் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன

168617

வெளியீடு
கதர் கிராமத் தொழில்
இயக்குனர் அலுவலகம்
சென்னை-4

அச்சிட்டோர்: சௌந்தரா பிரிண்டர்ஸ், 12, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.